உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 31 | விரோதிகிருது - தை - 10-2-72 | இதழ் 3

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

சிவராத்திரி விரதம்

தமக்கு எல்லா நலங்களையும் எப்பொழுதும் தந்து கொண்டிருக்கின்ற இறைவனை எப்பொழுதும் மறவாது நினைத்து, வாழ்த்தியும் வணங்கியும் இருத்தலே உயிர்கட்குக் கடமையாகும். அது பிற உயிர்கட்கு இயலாதாயினும், மக்களுக்கு அஃது இன்றியமையாதது. எனினும், உலகியல் சூழல்களால் அக்கடமையை ஆற்ற இயலாத நிலையில், குறிப்பிட்ட சில நாட்களிலேனும் மக்கள் அக்கடப்பாட்டில் நிற்றல் வேண்டும். அந்நன்னாட்களே விரத தினங்களாகும். 'விரதம், தவம், நோன்பு' என்பன ஒருபொருட் சொற்கள்.

இத்தகைய விரத தினங்கள் வைதிக சமயங்களில் பலவாக உள்ளன. எனினும், சிறப்புடைய விரதங்கள் சிலவே-

அவற்றுள் ஒன்று சிவராத்திரி விரதம், ' இராத்திரி என்பது இருட்காலம் ' என்பது யாவரும் அறிந்தது. எனினும், உண்மையான இருட்காலம், இறைவன் உலகம் முழுவதையும் ஒடுக்கிநிற்கும் காலம். இதனை ' சர்வ சம்மார காலம் ' என்றும், ' பிரளயம் ' என்றும், ' ஊழி முடிவு ' என்றும் பலவாறாகக் கூறுவர். இரவில் ஒளியின்றி, உயிர்களின் நடமாட்டம் இன்றி, எங்கும் அமைதி நிலவுதல் போல, இந்த ஒடுக்கக் காலத்தில் நிலம் இல்லை; நீர் இல்லை; தீ இல்லை; காற்றில்லை; சூரிய சந்திரர் இல்லை; விண்மீன் இல்லை; மற்றும் எப்பொருளும் இல்லை. ஆகவே செறிந்த இருள்தான் உள்ளது. உயிர்கட்கு இன்றியமையாத தனு கரண புவன போகங்களுள் ஒன்றும் இல்லாமையால், உயிர்களும் செயலற்றுக் கிடப்பனவாம். ஆகவே அப்பொழுது குறைவற்ற அமைதியே நிலவும். இந்தப் பேரிருளில் தனித்து நிற்பவன் சிவபெருமான். எனவே, நாம் நாள்தோறும் காண்கின்ற இரவு அனைவர்க்கும் உரிய இராக்காலம். இந்த ஒடுக்க நிலையாகிய இரவு சிவனுக்கே உரிய இராக்காலம். அதனால் அது, ' சிவ ராத்திரி ' எனப்படும். அதனைக் குறிப்பது மாசி மாதத்து அமர பக்கத்துச் சதுர்த்தசித் திதியன்று வருகின்ற இரவாகும். ஆகவே, சிவபெருமானிடத்தில் அன்புடையவர்க்கும் அன்றையநாள் சிறந்த நோன்பு நாளாகும்.

மேற்குறித்த பேரிருட் காலமாகிய ஒடுக்கத்தில் சிவபெருமான், உலகம் மீளவும் தோன்றுதற் பொருட்டு நடனம் புரிவான். அந்நடனத்தின் பயனாக ஒடுங்கிய உயிர்கள் மீளவும் தனு கரண புவன போகங்களைப் பெற்று மகிழும். அந்நலனைக் குறிக்கும் விழாவே மாசி மாதத்து அமாவாசை தினத்தன்று நிகழ்கின்ற மயானக் கொள்ளை நிகழ்ச்சி. இஃது இக்காலத்தில் தாந்திரீக முறையில் காணப்பட்டாலும்' அங்கு ஆடும் தெய்வம் ' பெரியாண்டவன் ' எனச் சொல்லப்படுதல் கூர்ந்து நோக்கத்தக்கது.

எனவே, ' சிவபெருமான் சுடலை யாடுதல் ' என்பதில் ' சுடலை ' எனப்படுவது உலகில் நாம் காண்கின்ற சுடலையன்று; உலகமெல்லாம் ஒடுங்கிய சர்வசம்மார நிலையேயாகும். சிவபெருமான் இரவில் ' எரியாடுகின்றான் ' என்பதும். ' ஒடுக்கக் காலத்தில் ஊழித்தீயில் அதனால் சிறிதும் தாக்குண்

ணது நிற்கின்ருன்' என்பதையே குறிக்கும். 'அங்குப் பேயோடு ஆடுகின்ருன்' என்பதிலும் 'பேய்' என்பது ஒடுக்கம் உற்ற ஆவிகளேயேயாம். எனவே, அப்பெருமானே உலகத்தை மீளத் தோற்றுவிப்பவனுதல் நன்கு அறியப்படும். இந்த ஊழிக் கால நடனம் கலித்தொகைக் கடவுள் வாழ்த்தில் மிக அழகாகப் பாடப்பட்டுள்ளது.

'ஒடுங்கிய உலகத்தை மீளத் தோற்றுவிக்குங்கால் இறைவன் சோதி வடிவான இலிங்கமாய் நின்று, 'இலளிதா தேவி' என்னும் பெயரோடு சத்தியைத் தோற்றுவித்தான்' என்றும், 'அத்தேவி இலிங்க வடிவாய் உள்ள இறைவனே வணங்கிப் பெற்ற வரத்தின்வழியே தனது மூன்று கண்களினின்றும் பிரமன் முதலிய மூவரையும் தோற்றுவித்து, அவர்கள் வழியாக உலகத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல்களேச் செய்விக்கின்ருள்' என்றும் புராணம் கூறும். ஒடுக்கக் காலமாகிய சிவராத்திரியின் பிற்பகுதி 'புனருற்பவத்தை (மறு தோற்றத்தை) இறைவன் திருவுளம் பற்றிய காலமாதலின், அவ் இரவின் மூன்ரும் யாமத்தின் முதல் முகூர்த்தமே, 'இலிங்கோற்பவ காலம்' எனச் சிறப்பித்துப் பேசப்பெறுகின்றது. சர்வ சம்மார காலத்திற்கு உரியதாகச் சொல்லப்படுகின்ற இந் நிகழ்ச்சி, ஒரு பிரம கற்பத்திலும் சொல்லப்பட்டு, அவ் விடத்தே பிரம விட்டுணுக்கள் சிவ சோதியின் அடிமுடி தேடி அறியாது நின்ற வரலாறும் சொல்லப்படுகின்றது. அதனுல் இவ்விரு வரலாறுமே சிவராத்திரி வரலாருகும். தன் முனேப்பால் சிவசோதியின் அடிமுடியை அறியாது நின்ற பிரம விட்டுணுக்கள் பின்பு, இலிங்க வடிவில் இறைவனே வழிபட்டுப் படைத்தல், காத்தல் தொழில்களோடு, மேலும் பல வரங்களேப் பெற்ருர்கள் என்பதே வரலாறு. அதனுல், சிவராத்திரி சிறந்த விரத நாளாகும். இந்நாள் இரவில் நான்கு யாமத்திலும் இலிங்க மூர்த்தத்தில் சிவபெருமானேச் சிறப்பான முறையில் வழிபடுவதும், சிவாலய தரிசனம் செய்தலும் இன்றியமையாதன. 'இவ்வாறு செய்தோர் எல்லா நலங்களேயும் பெற்றுச் சிவ சாயுச்யத்தையும் பெறுவர்' என்று ஆகமங்கள் கூறுகின்றன.

ஒவ்வொரு மாதத்திலும் அமரபட்ச சதுர்த்தசி, மாத சிவராத்திரியாகும். மாசி மாதத்து அமரபட்சத்துச் சதுர்த்த

சியே சிவபெருமான் சோதி வடிவாய்த் தோன்றிய மகா சிவராத்திரி. 'மாசி மாதத்தில் இரண்டு அமர பட்ச சதுர்த்தசி வருமானால், முதலில் வருவதையே கொள்ளவேண்டும்' என்று காரணாகமம்* கூறுகிறது. அதுபோல் இந்த ஆண்டில் மாசி மாதம் முதல் தேதியில் ஒரு சதுர்த்தசியும், முப்பதாந் தேதியில் ஒரு சதுர்த்தசியும் வருவதால், முன்னே வருகின்ற சதுர்த்தசியே சிவராத்திரியாகும். மேலும் பின்னே வருகின்ற சதுர்த்தசி, இரவில் ஒரு யாமம் தள்ளி வருகின்றது. நான்காம் யாமத்தில் சௌரமானப்படியும் பங்குனி மாதம் பிறந்து விடுகின்றது. இரண்டு சதுர்த்தசி வரும்பொழுது, எந்த நாளில் சதுர்த்தசி அதிகம் இருக்கின்றதோ அந்த நாளே சிவராத்திரி என்று சுவாயம்புவ ஆகமம்† கூறுவதால் அதன்படியும், இவ்வாண்டில் மாசி முதல் தேதி வருகின்ற சதுர்த்தசியே சிவராத்திரியாகும்.

விரதங்கள் எல்லாம் பெரும்பான்மையும் சாந்திர மானத்தை ஒட்டியே வகுக்கப்பட்டவை. சாந்திரமானப்படி பங்குனிமாதம், பிப்ரவரி 15ஆம் தேதியே பிறந்துவிடுகின்றது. ஆகவே, எல்லா வகையிலும் இவ்விரோதிகிருது மாசி மாதம் முதல் தேதி (13–2–1972) ஞாயிற்றுக்கிழமையே சிவராத்திரி தினமாகும். அன்றைய தினம் அன்பர்கள் முறைப்படி சிவராத்திரி விரதத்தை அனுட்டித்து நலம் பெறுவார்களாக.

---

* तिथिद्वयेतु संप्राप्ते मासादौ प्रथमेहनि ।
मासान्ते तु त्र्योदश्यां युते तथा ॥
पूर्वं तु कथितं श्रेष्टं अन्तं मध्यम मुच्यते ।

† अमावास्या युतावापि त्र्योदश्या युतापिवा ।
चतुर्दश्याधिका रात्रिः शिवरात्रिरिति स्मृता ॥

மாயூரம் சிவநேசச் செல்வர்கள் குருவழிபாட்டில்:

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

ஆசியுரை

"வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே."

"என்னை இப் பவத்தில் சேரா வகைஎடுத் தென்சித் தத்தே
தன்னைவைத் தருளி னாலே தாளிணை தலைமேல் சூட்டும்
மின்னமர் தருமைமேவி மெய்கண்டான் மரபில்வந்த
மன்னவ! சுப்ர மண்ய வள்ளலே போற்றி! போற்றி!"

மாயூரம் நகரப் பெருமக்களே! சைவ மெய்யன்பர்களே! தாய்மார்களே! குழந்தைகளே! இன்று எல்லோருமாகச்சேர்ந்து அன்புவெள்ளத்தில் திளைக்கச் செய்துவிட்டீர்கள்!

இறைவனுகவே கருதத்தக்க மூர்த்தம் ஆசாரியமூர்த்தம்! 'எட்டினோடு இரண்டும் அறியா என்னைப் பட்டிமண்டபம் ஏற்றினை' என்பர் மாணிக்கவாசகர். நம்மை, திருவருள் ஞான பீடமேற்றியிருக்கிறது. இப்பீடமேறினால், அதற்குரிய தகுதி தானே வந்து அமையும் என்பது முன்னோர் கொள்கை.

பாராட்டுரைகளைக் காட்டிலும், எதிர்முனைப் பேச்சுக்கள் ஒருவனது வளர்ச்சிக்குத் துணை செய்யவல்லன. இங்கே பேசிய

அன்பர் ஒருவர் ஆதீனத்தின் சமயப்பணி முடிந்துவிட்டது. ஆதீனம் சமுதாயப்பணி செய்ய முன்வரவேண்டுமெனத் துணிவோடு அழைத்தார். இன்று சைவத்திலும்-வைணவத்திலும் பிற மதங்களிலும் இருப்பவர்கள் அவ்வச்சமய நெறிகளை உணர்ந்து ஈடுபட்டவர்கள் எனக் கூறமுடியாது. சமயத்தின் உண்மைகளை உள்ளவாறு உணர்த்த இன்றைய நிகழ்ச்சிகள் போல்வனவோ, நம்மிடமிருக்கும் பொருள்களோ போதாது.

சிலதினங்களுக்குமுன் புதுவை மாநில ஆளுநர், கனம் திரு. ஜட்டி அவர்கள் திருமடத்திற்கு வந்திருந்தார். ஆகமங்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பரப்பும்படி கேட்டுக்கொண்டார். மேலும், இவ்வாறு சந்நியாசிகள் மக்கள் உள்ளங்களைப் பண்படுத்தித் திருத்தினால் அரசியல் துறையினர்க்கு வேலைப்பளு இல்லை. என்றும் குறிப்பிட்டார். அவரிடம் கூறும்போது சுவரின்றிச் சித்திரம் எழுதமுடியுமா? பொருளை உருவாக்கிய பின்னரல்லவா அவர்கள் மனங்களைத் திருத்தமுடியும்; சுவர் எழுப்பவே நேரம் போதவில்லை. சித்திரம் எழுதுவது பற்றி நினைக்க முடியவில்லை. என்றேன்.

விவசாயப்பெருங்குடி மக்களைப் பட்டினிபோட்டுத் திருத்த முடியாது. அவர்களது நெடுநாளைய பாக்கிகளைத் தள்ளிக் கொடுக்க நினைக்கிறோம். பலர் முறையாக - நேர்மையாக நடந்து கொள்வதில்லை. நல்லவர் இருவர் நட்பு நெடுநாள் நீளும்! நல்லவனும் - தீயவனும் நட்புச்செய்தால் நல்லவன் ஏமாறுவான். குடிமக்களுள் நல்லவர்களும் இருக்கிறார்கள். அல்லாதவர்களும் இருக்கிறார்கள். ஒருசிலர் ஆதீனத்திற்குச் சேரவேண்டிய நெல்லை அளக்கிறார்கள். நாட்டில் தீயவர்கள் சிலர்; அவர்களே பலரையும் கெடுக்கிறார்கள். நாம், தாய்-தந்தையர் ஸ்தானத்தில் இருக்கிறோம். குழந்தைகளாகக் குடிமக்களை வளர்க்கும் கடமை நமக்கு இருக்கிறது. ஆனால் பலருக்கு இந்நிலை புரியவில்லை. இத்தகு நிலையில் ஆகமங்களை வெளியிடும் எண்ணங்கூடத் தோன்றுவதில்லை என்றோம். அவரும் உடன்பட்டு, இயன்றவரை செய்யும்படி வலியுறுத்திப்போனார்.

'ஈன்று புரந்தருதல் என் தலைக்கடனே' என்ற புறநானூற்றுப்பாட்டு கடமைகள் பலதரப்பட்டன என்பதை விளக்குகிறது. உடல் வளர்ச்சியைக் காட்டிலும் ஆதீனங்கள் உயிரை வளர்க்கப் பாடுபடவேண்டும். தேசபக்தியும் - தெய்வபக்தியும் இருகண்

போன்றன. அண்மையில் நடந்த பாகிஸ்தான் போரில் 16 ஆயிரம் பேர் உயிர் இழந்தனர். அவர்கள் குடும்பத்தாரைப் பாதுகாக்கவேண்டிய கடமை நமக்கு உண்டு. அவ்வகையில் நம் கடமையை ஒரு சிறு தொகை கொடுத்ததன் மூலம் நிறைவு செய்தோம்.

உயிரைப் போலவே உடம்பும் பேணப்படவேண்டுமென்பது சான்றோர் கருத்து. 'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்' என்பது திருமூலர் வாக்கு. உயிரைப் பாதுகாக்கவே உடம்பு என்ற எண்ணம் வரவேண்டும். சமயங்கள் மனித உயிர் வளர்ச்சியடைய வேண்டும் என்பதற்காகவே தோன்றின. உயிர் வளர்ச்சியின்போது உடலும் வளர்கிறது. நெல்லுக்கு இறைத்த நீரில் புல்லும் வளர்வதைக் காண்கிறோம்.

தேசபக்தி இல்லை என்றால் தெய்வபக்தி இல்லை. என்றும் அருட்டுறை தேவைகளுக்குப் போக எஞ்சிய தொகையை சமுதாய நலன்களுக்குச் செலவிட நாம் தயங்கப்போவது இல்லை. சமுதாயமும் - அறநிலையங்களும் ஒன்றிற்கு ஒன்று உதவியாக நின்று செயற்பட்டதாகக் கல்வெட்டுக்கள் விளக்குகின்றன.

அழைப்பில் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என அச்சிட்டிருந்தனர். குலம் ஒன்றுதான்! தேவன் ஒருவன்தான்! தேவன் ஓராயிரந்தான்! காவிரி ஒன்றாக இருந்தாலும் பல கிளையாகப் பிரிந்து பல லட்சம் மக்களை வாழ்வித்துக் கடலில் சேர்கிறது. ஒன்றாக இருந்தால் காவிரியின் பயனை எல்லாரும் பெற இயலாது. வாய்க்காலில் ஓடும் தண்ணீரும் காவிரியாதல்போல ஆயிரம் நாமங்கள் இருந்தாலும் இறைவன் ஒருவன்தான்! ஆறு, கால்வாய், சிற்றோடை, குளமாகப் பாய்வது போல, சிவன் என்ற பேராற்றுக் கிளை முருகன், விநாயகர் என்ற மூர்த்தி பேதங்களாக விளங்கி நிற்கின்றன.

இல்லறத்திற்கு அன்பும், துறவறத்திற்கு அருளும் திருவள்ளுவரால் எடுத்துக்காட்டப்படுகிறது. தாய், மனைவி, குழந்தை, மாமன், மாமி என்று தொடர்புடையார்மாட்டுத் தொடங்கிய அன்பு 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற நிலைவரும்போது அருளாக மாற்றம் பெறுகிறது. அனுபவம் ஓரளவு முற்றிய நிலையிலேயே துறவறம் சித்திக்கும். ஒருவன் ஒரு குடும்பத்தில் துறவு நெறி மேற்கொண்டால், 21 தலைமுறையின் பாவங்கள் போகும் என்பர். இல்லறநெறி நின்றோ, அல்லது துறவற நெறிநின்றோ செயலாற்றும் தொண்டர்கள் சமயத்துறைக்குத் தேவை.

தொண்டுள்ளம் கொண்டவர்கள் முன்வந்தால்தான் சமயப்பணி வெல்லும்.

இறையவர் திருமேனிகளின் அமைப்பில் உள்ள தத்துவங்களை நாம் புரிந்து வழிபட வேண்டும். தெட்சிணாமூர்த்தித் திருவுருவத்தின் முத்திரையில் எவ்வளவோ உட்பொருள் உண்டு. கட்டைவிரல் இறைவன், சுட்டுவிரல் உயிர், நடுவிரல் ஆணவம், மோதிரவிரல் கர்மம், சுண்டுவிரல் மாயை. மும்மலத்தோடு பிணைந்து நிற்கும் உயிர் அவற்றை விடுத்து இறைவனோடு இணைதல் வேண்டுமென்பதே இம்முத்திரையின் பொருள். இவ்வாறு தத்துவம் உணர்ந்து வழிபடவேண்டும். அன்பும் வேண்டும் - அதிலே விவேகமும் வேண்டும். அன்பும் - விவேகமும் கொண்ட சமய நெறி செழித்தால் இவ்வட்டாரமும் - இந்நாடும் வாழ்வுபெறும். சைவ நல்லன்பர்களுக்குச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளும், ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருவருளும் பெருகுக, என பிரார்த்திக்கிறோம்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi.

25—1—1972 இல் எல்லாம்வல்ல பிரமபுரத்து ஈசனையும் இறைவி திருநிலை நாயகி அம்மனையும் என் குடும்பத்துடன் வழிபட பயன் கிடைத்தது. இந்நாள் ஒரு பொன்னான நாள். ஆலய நிர்வாக அதிகாரி மிகவும் ஆர்வமுடன் தெரிசனம் செய்து வைத்தது போற்றுதற்குரியது. கண்கள் படைத்த பயன் அடைந்தோம்.

(Sd) S. V. Narasimhah,
P. A. to Chif Engineer,
26—1—72. (High ways. w)

சிதம்பரம் வரவேற்பு விழாவில்:

உ
குருபாதம்
திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
வழங்கியருளிய

ஆசியுரை

சிதம்பரம் தலங்கள் எல்லாவற்றிலும் சிறப்பு மிக்க தலம் இதற்குக் காரணங்கள் பல. பஞ்ச பூதங்களில் ஆகாயமே மேலானது; அந்த ஆகாயத்தலமாக விளங்குவது சிதம்பரமே.

பிருதிவிஸ்தலமாகத் திருவாரூரும் காஞ்சியும் சொல்லப்படுகின்றன. அதற்குக் காரணம் அந்த இருதலங்களிலும் மூலத்தானம் பிருதிவி லிங்கமாய் இருப்பதே. திருவாரூர் வன்மீகநாதம்; அதாவது புற்றிடங் கொண்டது. காஞ்சிபுரம் உமாதேவி மணலை இலிங்கமாக்கிப் பூசித்தது. இம்முறையில் பார்க்கும் பொழுது திருவையாறும் பிருதிவிஸ்தலமேயாகும். ஏனெனில் பெருமான் அங்குப் புற்றிடங் கொண்டே விளங்குகின்றார். திருநாவுக்கரசர்,

" எல்லா உலகமும் ஆனாய் நீயே;
ஏகம்பம் மேவி யிருந்தாய் நீயே
... ...
திருவையா றகலாத செம்பொற் சோதீ "

என்று திருவையாற்றைக் காஞ்சிபுரத்தோடு இணைத்துப் பாடியருளினார். திருவாசகத்தில்,

" ஆரூர் அமர்ந்த அரசே போற்றி ?
சீரார் திருவை யாறா போற்றி !

என்று, அது திருவாரூருடன் இணைந்து நிற்பதைப் பார்க்கின்றோம். இக் குறிப்புக்கள், திருவாரூர், காஞ்சிபுரம் போலத் திருவையாறும் பிருதிவிஸ்தலமே என்பதைக் குறிப்பனவாகும்.

திருவானைக்காவில் மூலத்தான மூர்த்தி தண்ணீரிலேயே யிருத்தல் யாவரும் அறிந்தது. அதனால் அஃது அப்புஸ்தலம். திருவண்ணாமலை பிரம விட்டுணுக்களுக்கு முன் சிவபெருமான் அக்கினிப் பிழம்பாய்த் தோன்றிய தேயுஸ்தலம். காளத்தி வாயு ஸ்தலம். அங்கு மூலத்தானத்தில் உள்ள விளக்கு எப்பொழுதும் அசைந்துகொண்டேயிருப்பதைப் பார்க்கலாம். சிவபெருமான் நடனம் புரியும் இடம் 'சிற்பர வியோமம்' எனப்படும் சிதாகாசமே யாதலால், கூத்தப் பெருமான் எழுந்தருளியுள்ள இந்தச் சிதம்பரம் ஆகாசத் தலமாகும்.

மற்றும் உயிர்களின் இருதய வெளியும் ஆகாசமே. இதனை 'தகராகாசம் என்பர். இறைவன் இருதய வெளியாகிய தகரா காசத்தில் நடிப்பதே இருதயத் துடிப்பாக அமைகிறது. அது போலவே உலகம் நடைபெறுவதற்கு இறைவன் புறத்தில் அண்டத்தில் நடனம் செய்கின்ற இடம் சிதம்பரமே, இதனால் சிதம்பரம், 'விராட் புருடனுக்கு இருதயஸ்தானம்' என்று சொல்லப் பெறுகிறது.

இந்தச்சிதம்பரம் எங்கள் 25ஆவது குருமகாசந்நிதானத்தின் அவதாரஸ்தலம். அவர்கள் நடராஜப்பெருமானது திருநடனமே உலகத்திற்கெல்லாம் காரணம் என்பதைத் திருவுள்ளத்தில் கொண்டு ஓர் ஆண்டில் மூன்றுமுறை ஸ்ரீ நடராஜப்பெருமானைத் தரிசனம் செய்வது என்ற நியமத்தைக் கொண்டிருந்தார்கள். திருவாதிரை, மகாசிவராத்திரி, ஆனித்திருமஞ்சனம் என்பவை அந்த மூன்று நாட்களாகும்.

இன்ன பல சிறப்புக்களால் இச் சிதம்பர தலம் ஒன்றே, 'கோயில்' என வழங்கப்பெறுகின்றது. சிதம்பர தலமே கோயிலாய் இருப்பதால், 'இங்குப் பள்ளிகொள்ளுதல் கூடாது, என்று ஞானசம்பந்தர் இதற்கு அருகில் உள்ள திருவேட்களத் தில் சென்று இராத்தங்கிக் காலையில் மீள இங்கு எழுந்தருளினர்.

சிதம்பரம் சமயாசாரியர் நால்வராலும் பாடப்பெற்றது. சந்தானசாரியருள் இருவர் அன்று இங்கு எழுந்தருளினர்கள். இன்றும், ' அவர்களில் மறைஞானசம்பந்தர் இத்தலத்திற்கு வடக் கிலும், உமாபதி சிவாசாரியார் இத் தலத்திற்குக் கிழக்கிலும் எழுந் தருளியிருக்கின்றனர்கள். அவர்களில் உமாபதிசிவாசாரியார் தில்லைவாழ் அந்தணர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தில்லைவாழ் அந்தணர்களைச் சிவபெருமானே "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று சொல்லிச் சுந்தரருக்கு அடியெடுத்துக் கொடுத்தார் என்றால், அவர்களது பெருமை எத்தகையது என்பதை நாம் எடுத்துச் சொல்ல வேண்டுவதில்லை. இவர்கள் கூத்தப்பெருமானைத் தீண்டிப் பூசிக்கும் பேறு பெற்றவர்கள். சுந்தரர் பொதுவாக ஆதிசைவ அந்தணர்களை, "முப்போதும் திருமேனி தீண்டுவார்" என்றார். தில்லைவாழ் அந்தணர்கள் திருச்சிற்றம்பலமுடையாரையும், கூத்தப் பெருமானையும் காலந்தோறும் தீண்டிப் பூசிக்கும்உரிமை உடையவர்கள்.

இவர்களால் வழங்கப்படும் தில்லைத் திருக்கோயில் இன்றும் உலகியல் ஆட்சிக்கு உட்படாமல் சுதந்திரமாக இருக்கின்றது. இக்கோயிலுக்கு நிலையான சொத்தாக எதுவும் இல்லை. பிற கோயில்களுக்கு நூற்றுக்கணக்கான வேலி நிலங்கள் இருப்பது நாம் அறிந்தது. நடராஜப்பெருமானுக்கு ஒரு குழி நிலங்கூடக் கிடையாது.

ஆனால், நடராஜப் பெருமானுக்கு நிகழ்கின்ற நித்திய நைமித்திக வழிபாடு போல மிக்க சொத்துடைய கோயிலிலும் நடைபெறுவதில்லை. அதோடு; அந்த வழிபாடுகள் காலம் தவறாமல் நடைபெறுவது ஒரு தனிச் சிறப்பு. நடராஜா என்பதற்கு ஏற்க, அவருக்கு ராஜதர்ப்பாரில்தான் நடக்கின்றது. இவை யாவும் கட்டளைகளாலே நடைபெறுகின்றன. அது கூத்தப் பெருமானது திருவருட்சிறப்பேயாகும். தெய்வம் இல்லை என்பவர்கள் இத் தில்லை நடராஜரது கோயில் நிகழ்ச்சிகளைக் கண்டால் நிச்சயமாகப் பக்தி உண்டாகும். "இல்லை என்பான் யாரடா - தில்லையிலே பாரடா என்ற ஒரு பாட்டும் உண்டு.

இத்தகைய சிறப்புக்களில் இப்பொழுது நடைபெறுவது சிவகாமி யம்மை திருக்கோயிலின் பெருஞ்சாந்தியாகிய மகா கும்பாபிஷேக விழாவாகும். இச்சிறப்பிற்கிடையில் இங்குள்ள தில்லைவாழ் அந்தணர்களும், சிதம்பரம் அன்பர்களும், மற்றும் இதைச் சார்ந்துள்ள ஊர்களில் உள்ளவர்களும் தங்களுக்கு உள்ள சிவபக்தி குருபக்தி மிகுதியால் சைவ ஆதீன மகாசந்நிதானத்தை வரவேற்க விரும்பிச் செய்த நல்ல ஏற்பாட்டின்படி இன்று காலைமுதலாக இவ்வரவேற்புவிழா மிகச் சிறந்தமுறையில் நடைபெறுகின்றது. வரவேற்பு இதழ்கள், பொன்னாடைகள், மாலை மரியாதை முதலிய பலவற்றால் சைவப் பேரன்பர்கள் பலரும் சமய பற்றையும், ஆர்வத்தையும் புலப்படுத்தி இருப்பது

மிக்க மகிழ்ச்சியையும், நமது சமயத்தின் வளர்ச்சி பற்றிய நம்பிக்கையையும் நமக்குத் தருவனவாய் உள்ளன. இந்த ஊக்கத்தோடு ஊக்கமாக இக்கோயிலின் திருமதில் திருப்பணி முதலிய பல திருப்பணிகளும் முற்றுப் பெறுதற்கு அன்பர்கள் முயற்சி எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். ஒவ்வொருவரும் மாதந்தோறும் வருகின்ற தங்கள் ஜென்ம நக்ஷத்திரத்தில் நடராசப் பெருமானுக்குக் காணிக்கையாகக் கொடுப்பது என்று உறுதி எடுத்துக் கொண்டால், மிக எளிதில் பெருந்தொகை திருப்பணிக்குச் சேர்ந்துவிடும். மேலும்சிலர் இப்படிப்பட்ட அன்பர்கள் நூறுபேரையாவது சேர்ப்பது என்று அதற்குத் தாங்கள் செல்வாக்கைப் பயன் படுத்தலாம்.

நமது ஆதீனத்தின் சார்பில் அவ்வாறு நாம் ஒரு நூறு பேரைச் சேர்த்து வைப்போம். நமது ஜென்ம நட்சத்திரத்தில் அத்தகைய காணிக்கையை நாம் கூத்தப்பெருமான் திருவடிக்குச் சமர்ப்பிக்கலாம். அன்பர் பலரும்இதில் ஊக்கங்கொண்டால் இத்திருப்பணி பெரிதல்ல. அன்று சோழமன்னர், பல்லவமன்னர்கள் பல கோயில்களைக் கற்றளிகளாக்கினர். இன்று எந்த மன்னரும் இல்லை. மக்கள்தாம் மன்னர்கள், ஆகையால், அவர்கள்தாம் திருப்பணியைச் செய்யக் கடமைப்பட்டவர்கள். ஆகவே, அவர்களுக்கு உள்ள கடமையை நாம் இப்பொழுது நினைவுபடுத்துகின்றோம்.

இறைவனுக்குத் திருப்பணி செய்வதால் நாம் பயன் அடைகின்றோமேயல்லது, அவனுக்கு ஒன்றும் அதனால்பயனில்லை, கைம்மாறு கருதாத கருணை காரணமாக அவன் எல்லாருக்கும் நலம் புரிவதல்லது, அவனுக்கு நாம் செய்யும் நன்மை ஒன்றுமில்லை. ஆகவே, இந்த நல்ல செயலில் அனைவரும் ஆர்வங்கொண்டு உழைத்தல் வேண்டும். அதற்குத் தில்லைவாழ் அந்தணர்களும், அன்பர்களும் தங்களுக்குள் பரஸ்பரம் தொடர்பு கொள்ளுதல் வேண்டும். எல்லாவற்றிற்கும் கூத்தப்பெருமானது திருவருள் முன்நிற்க வேண்டும்.

திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ தியாகராஜப் பெருமான், சுந்தரர் திருத்தொண்டத்தொகை பாடுவதற்கு முதற்கண் "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று அடியெடுத்துக் கொடுத்தார். தியாகராஜர் எடுத்துக்கொடுத்தது நடராஜர் எடுத்துக்கொடுத்ததுதான். சுந்தரர் தில்லையில் வழிபட்டபோது திருவாரூருக்குச் செல்க என்று அருளியவர் நடராஜர். தியாகராஜர் வேறல்ல நடராஜர் வேறல்ல.

"ஒன்றேகுலமும் ஒருவனே தேவனும்" என்ற திருமூலர் திருமந்திரத்தால் இது நன்கு தெளிவாகின்றது. அத்தகைய தில்லைவாழ் அந்தணர்கள் உள்ள சிதம்பரத்தில் நாம் கூடியுள்ளோம்.

மக்களும், திருப்பணிக் குழுவினரும் ஒத்துழைத்துத் திருப்பணிக்கு உழைப்பார்களேயானால், நாமும் நம்மால் கூடியதைச் செய்ய மகிழ்ச்சியுடையவர்களாய் இருக்கின்றோம். 'நாமே தனிமையில் திருப்பணியைச் செய்கின்றோம்' என்று சொன்னால், அது "உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி இடைக்கண் முரிந்தார் பலர்" என்னும் திருக்குறளுக்கு இலக்காகும்.

இந்த நல்ல நினைவுகளுக்கெல்லாம் காரணமாக அமைந்த வரவேற்பு விழாவை ஏற்பாடு செய்து நிகழ்த்திய அன்பர் பலரும் குருவருளுக்கும், திருவருளுக்கும் உரியவர்கள். அறப்பணிச்செல்வர், டாக்டர், திரு. கே. அரங்கசாமிப் பிள்ளை, திரு. பொன்னம்பலம் பிள்ளை முதலியோர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். அவர்கள் அனைவரும் நமது ஆதீன குருமுதல்வரது அருளால் எல்லா வகையான நலங்களும் பெற்று நீடுவாழ இறைவன் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம். 'தில்லைவாழ் அந்தணர் மூவாயிரவர்' என்பது மரபு. ஆனால், அவர்களில் இன்று இருநூறு குடும்பமே உள்ளன என்கின்றார்கள் அவர்கள் எல்லா நன்மைகளும் பெற்று வாழக் கூத்தப்பெருமான் திருவருள் புரிவானாக.

குமரகுருபரன்

தருமையாதீனத்து முனிபுங்கவரும். ஸ்ரீ காசிமடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச் செய்யும் ஆராய்ச்சிவிளக்கத்துடன் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின் வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

ஆண்டுச் சந்தா :- ரூ 3—00

விலாசம் :— நிர்வாக ஆசிரியர்,
உயர்திருவாளர், T. M. குமரகுருபரன் பிள்ளை
B. A., B. L., அவர்கள்
குமரகுருபரன் ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருமயிலாடுதுறை எழுந்தருளி மாயூரம் சிவநேயச் செல்வர்கள்
மனமுருகி வழங்கிய வரவேற்பினை ஏற்றருளியபோது

கோவைத் தொழிலதிபர் திரு. நா. மகாலிங்கம் அவர்கள்

பணிவுடன் சமர்ப்பித்த வணக்கவுரை

அருள் வடிவாக எழுந்தருளி அன்பர்கள் நெஞ்சை
ஆட்கொள்ளும் தருமைக் குருமணியே!

இன்று மாயூரம் சிவ நேயச் செல்வர்கள் நிகழ்த்துகின்ற இவ்வரவேற்பு விழா மனமுருகிப் பொலியும் அருள் விழாவாகத் திகழ்கின்றது. இது மாயூரம் பெருமக்கள் விழா மட்டுமன்று: இம் மாநிலமே மகிழ்ந்து பாராட்டும் மாபெரும் விழாவாகும். திருமூல தேவர் நம் சிவநெறியைக் 'குரு நெறியாம் சிவமா நெறி' என்று குறித்தருளுகின்ருர். சிவ நெறியாளர் அனைவரும் குருவின் திருமேனி கண்டும், திருவார்த்தை கேட்டும், திருநாமம் செப்பியும், திருவுருவைச் சிந்தித்தும், தெளிந்த சிவ ஞானப் பேறு பெறுதற்குரியர் என்பதும் அவர்தம் கருத்து அந்நெறியே இன்று நடைபெறும் இவ் வரவேற்பு. குருவழி பாட்டு விழாவாகத் திகழ்கின்றது.

ஏறத்தாழப் பத்தாண்டுகளாகத் தங்களின் அருட்தொடர்பு எளியேனுக்கு வாய்த்துள்ளதனை எண்ணி மகிழ்கின்றேன். சிவ ஞானத் தெளிவை எங்கும் பரவச்செய்ய வேண்டும் என்று இடையருது எண்ணும் தங்கள் செவ்விய மனமும், செயலாற்றும் திறமும் உலகறிந்தவை திருத்தொண்டின் நெறிவாழத்தோன்றிய அப்பர் பெருமானுக்கு அருளாலயம் எடுத்து பணிகளை முற்றுவித்த தங்கள் தொண்டினைத் தமிழகம் என்றும் நன்றியோடு பாராட்டி மகிழ்கின்றது.

திருக்கோயில்களனைத்தும் திருப்பணிகளாலும், கும்பாபிஷேகங்களாலும் தூய்மையும் பொலிவும் பெற்றுத் துலங்கத் திருவுளம் பாலித்த 25-ஆவது குருமகாசந்நிதானத்தின் அருளாட்சி, மேலும் தொடர்ந்து, தங்கள் அருள் உளத்தால் ஆகமங்கள் முதலிய அருள்ஞான நூல்களைப் பரப்பும், புகழாட்சியாகத் திகழ வேண்டுவதே என் விருப்பமும் விண்ணப்பமும் ஆகும். தங்கள் அருளரசு நீடு நிலவுக. எல்லோருக்கும் இறையருள் இன்பத்தை வழங்குக.

"ஒளி வந்தென் உள்ளத்தின் உள்ளே ஒளிதிகழ
அளி வந்த அந்தணனைப் பாடுதுங்காண் அம்மானய்"

சென்னை–28.
1–2–'72.

(ஒ-ம்) நா மகாலிங்கம்.

கடிதம்

ஜஸ்டிஸ்
எஸ். மகராஜன்

சென்னை,
29—1—72.

அருள்நிறைந்த ஸ்ரீலஸ்ரீ
குருமகாசந்நிதானம் அவர்களுக்கு
நமஸ்காரம்,

அன்று மகாசந்நிதானம் பசுக்களுக்குப் பூஜை செய்த திருக்கோலம் என் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து என்னைப் பரவசப்படுத்திக்கொண்டிருக்கிறது.

அரிய சமய உண்மைகளை அருகதையற்றவர்களுக்கு விளக்குவது தவறு என்றும், சமயத்துக்கு என்று தனிச் சடங்குகள் உண்டாக்கி அதை மூடாக்குப் போட்டுப் பாதுகாக்கவேண்டும் என்றும், அப்படிச் செய்யாவிட்டால் சமய உணர்வற்றவர்கள் சமயத்தில் கைவைத்து அதைத் தீட்டுப்படுத்திவிடுவார்கள் என்றும் மல்லார்மே (Mallarme) என்ற ப்ரெஞ்ச் ஞானி சொல்லுவார்.

"கிரியைகள் அலங்காரமாய் ஆனந்தத்தை விளைக்கக் கூடியனவாய் இருந்துவிட்டால், நம்முடையவர்களுக்குப் புத்தியே வந்து விடும், எல்லாத்துறைகளிலும் நிபுணர்களாகி விடுவார்கள், உண்மையோடு ஒட்டிப் பேசுவார்கள்", என்று ரசிகமணி டி. கே. சி, அடிக்கடி சொல்லுவார்கள்.

தர்மபுர மடத்தில் தங்கியிருந்தபோது டி. கே. சி. எனக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அதுபின் வருமாறு:- "இரண்டு நாளாக மடத்தில் தங்குகிறோம். தமிழ்நாட்டுப் பண்பாடு நிறைந்த நிலையத்தில் தங்குகிறோம். மகாசந்நிதானம் நடத்துகிற பூஜையும் பக்தியும் வெகு ரம்மியம் ஆனவை. சைவத்தின் அழகும் ஆனந்தமும் மனசுக்கு உவந்தவை. இத்தகைய சமயப் பண்பாட்டை வேறு எங்கும் காண முடியாது.

சாந்திநிகேதனத்துக்கும் போய்த்தானிருக்கிறேன். சமயப்பண்பாடு என்றால், அங்கே வறண்ட நிலேதான். கிறிஸ்தவ மார்க்கத்தின் சாயல்தான். பிரார்த்தனைக் கான இடத்தைச் சுற்றிக் கல்லறைகள் இல்லை. அவ்வளவுதான்.

இங்கோ, மூர்த்தி என்ன, தீபாராதனையின் அழகு என்ன, பாடல் என்ன, எல்லாம் மனசையும் கண்ணை யும் கவர்ந்துவிடுகின்றன. சாந்திநிகேதனில் எல்லாம் லெக்சர் தான்.''

டி. கே. சி. கவி ரவீந்திரரிடத்தில் பக்தியுடைய வர்கள். ஆனால், கவி ரவீந்திரர் ஆனந்த அனுபவம் நிறைந்தவராயிருந்தும், அந்த அனுபவத்தை அவருக்குப் பின்வரும் சந்ததியாருக்கு அவரால் வழங்கமுடியாமல் போயிற்றே என்று டி. கே. சி. ஆற்றாமைப்பட்டார்கள்.

தர்மபுரத்திலும் திருவாவடுதுறையிலும் நடக்கும் சடங்குகளை சமீபத்தில் நான் கண்டபோது ஒரு அரிய உண்மை புலனாயிற்று. சமயத்தால் ஏற்படும் ஆனந்தத் துக்கு, அழகிய சடங்குகள் மூலம், ஒரு நிரந்தர வடிவத் தையே இரண்டு ஆதீனங்களிலும் கொடுத்துவிட்டார் கள் என்பதை நேரில் உணர்ந்துகொண்டேன். இதனால் எனக்கு ஏற்படும் பெருமிதம் கொஞ்ச நஞ்சமல்ல.

இந்தப் பெருமிதத்தையும் கொடுத்து என்னை வாழ்த்தியும் அருளிய சந்நிதானத்துக்கு என் நன்றி தோய்ந்த வணக்கம்.

அன்பன்,
எஸ். மகராஜன்.

குறிப்பு :- 1—2—72ல் சிவநேசச் செல்வர்கள் சந்நிதா னத்துக்குச் செய்யும் வழிபாட்டில் இக் கடிதத்தைப் படிக்கச்செய்யுமாறு விழாக் குழுவினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில்
ஸ்ரீ மெய்கண்ட தேவர்க்கு அபிடேக அலங்காரம் செய்வித்து
மகர கண்டிகை அணிவித்த காட்சி.

துறைசை, தருமை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கள்
சந்தானசாரியர்களுள் முதல்வராகிய
ஸ்ரீ மெய்கண்டாரை வழிபடுதல்.



மாயூரம் சுற்றுவட்டாரச் சைவப் பெருமக்களும்,
ஏனையோரும் தருமையில் குருவழிபாடு நிகழ்த்தியபோது
திரு. மு. அருணசலம் M. A., அவர்கள் அன்பர்கள் சார்பில்
பாராட்டுப்பணிவுரை நிகழ்த்துதல்

மாயூரம் சிவநேசச்செல்வர்கள் குருவழிபாட்டின்போது
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தினிடம் விழாக் குழுவின் சார்பில்
டாக்டர். திரு. K. சாமிநாதன் அவர்கள் பாராட்டிதழை வாசித்து
சிவலிங்கப் பேழையில் வைத்து அளித்தல்

ம்பரத்தில் சிவநேசச்செல்வர்கள் குருவழிபாட்டில்
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்திற்கு
றப்பணிச்செல்வர், சிதம்பரம், டாக்டர். அவர்கள்
பாராட்டிதழ் படித்தளித்தல்

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானத்தில்
சிதம்பரம் ஸ்ரீ சிவகாமியம்மை யாகசாலை தரிசனத்திற்கு
எழுந்தருளியபோது

திருவெண்ணெய்நல்லூர்
அருட்டுறை ஆலய வழிபாட்டிற்கு எழுந்தருளிய
துறைசை. தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்களை
பூரணகும்ப மரியாதையுடன் வரவேற்றல்

மாயூரம் சிவநேசச்செல்வர்கள் குருவழிபாட்டில்
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில்
அன்பர்கள் புடைசூழ விழா மேடைக்கு எழுந்தருளல்

சிவதருமோத்தரக் கட்டுரை எண் 2.

திருக்கயிலை மலையிலே!

தருமையாதீனப்புலவர், மகாவித்துவான்.

திரு. ச. தண்டபாணி தேசிகர்

அகத்திய முனிவர் மொழியுலகத்திலும், சமய உலகத்திலும் முன்னணியின் தலைவர். அவராலே வாழ்ந்தது தமிழ், வளர்ந்தது தமிழ், சமய தத்துவங்களும் அவராலேயே வளர்ந்தன; வாழ்ந்தன. உருவத்தில் சிறியவராய், உள்ளத்தாற் பெரியவராய் உள்ள ஒவ்வொருவரையும் அகத்தியர் என்று அழைக்கும் அளவுக்குப் பெரிய வியாபகத்தையடைந்தவர். முனிவர் எழுவருள் ஒருவர். இராவணனைத் தமிழ்நாட்டை ஆளாதபடி வென்று விரட்டிய வீரத்தமிழர். தொல்காப்பியர் முதலிய மாணாக்கர்களுக்குச் செந்தமிழ் இலக்கணத்தை திரட்டிய தெய்வ முனிவர். தவத்தின் சிகரம், புண்ணியத்தின் பொருப்பு. சிவ முனிவர்க்காகத் திருமுறைக் கடலை கடைந்து அமுதத்தை திரட்டி தந்த அருந்தவ முனிவர். இத்தகைய பெரியவருக்கும் ஓர் ஐயம் உண்டாயிற்று.

கயிலைமலை அமைதிக்கு - ஆனந்தத்திற்கு - இடமான அருள் நிலையம். அங்கே மிகமிக அமைதியான ஓர் சூழிடம். இளமைக்கும் இனிமைக்கும், மனத்திற்கும் உருவாகிய ஓர் இளம்பிள்ளை வீற்றிருக்கிறது. தோற்றம்தான் இளமையேயொழிய, ஆண்டால், அருள் நிறைவால் ஊழூழிக் காலம் வற்றுஊற்றாக விளங்கும் முருகக் கடவுள்தான் அந்த இளம் பிள்ளை.

அந்த இளம்பிள்ளையின் திருமுன்பு தொண்டுகிழமாகிய அகத்தியர் போகிறார். கைகூப்பி வணங்குகிறார். பலப்பல சொல்லி பணிந்து தாழ்ந்தெழுகிறார். 'பெருமானே, தேவரீர் சீபாதத்தைத் தரிசித்தால் கொடிய புள்ளும் விலங்குகளும்கூட வினையின் நீங்கி விளக்கம் பெறுமே. மனிதராகவும், தேவராகவும் பிறந்து சிவத் திருவடி போற்றி உய்யுமே! அப்படியிருக்க, தவத்தால், சிவசிந்தனையால் மிக்க மனிதர்கள் தரிசிக்கில்

எத்தகைய பேறு அடைவார்கள். அவர்கள் சிவப்பேறு எய்தும் செந்நெறியை எனக்கும் விளங்கச் செய்தல் வேண்டும்' என்று விண்ணப்பித்துக் கொள்கிறார்.

முருகப் பெருமான் கனிந்த உள்ளத்தொடு, கருணைவழியும் கண்களோடு அகத்தியர் முகத்தை நோக்கினர். சில கணங்கள் சென்றன. அதற்குள் அகத்திய முனிவர், பாலை வனத்தில் பதினொன் காதம் நடந்து வந்தவன் தண்ணீருக்குத் தவிப்பது போலவும், பத்தெட்டு நாள் பட்டினி கிடந்தவன் பசியால் பரிதவிப்பது போலவும் பரபரப்பதையும் ஆதரத்தால் அல்லலுறுவதையும் கண்டார், உளங் கனிந்தார். 'நீ என்ன? உன் வாயிலாக உலகமே உய்யட்டும் என்று உண்மை ஞானத்தை உனக்கு உபதேசிக்கிறேன் கேட்பாயாக' என்றார்.

அகத்தியர், அடியேன் உய்ந்தேன். அடைவே சொல்லுக' என்று முருகன் திருவடியில் வீழ்ந்து புகழ்ந்து போற்றி, பெரும! சிவதருமத்தின் முறைமை யாது? சிவவாக்கியம் யாது? சிவ பெருமானை வழிபடும் முறைமை யாது? சிவஞானத்தை மாணக்கர்களுக்குக் கொடுக்கும் முறை யாது? கொடுக்கும் இடத்தின் தன்மை யாது? பொதுவாக உயிர்கள் சொர்க்க, நரகங்களை அடையும் முறைமை யாது? சொர்க்க, நரகங்களையடைந்த உயிர் மீளவும் பூமியில் பிறப்பது எதற்கு? அவனவன் செய்ய வேண்டிய கடமைகள் எவை? தவறினல் வரும் தீமைகள் எவை? தீமைகள் வாராவண்ணம் தடுக்கும் பரிகாரங்கள் எவை? இவற்றை வினக்கியருள வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டார்.

இந்த வேண்டுகோளைக் கேட்ட குமரகுருபரனாகிய முருகப் பெருமான் சிறிது நேரம் சிவசிந்தனையிலிருந்து கூறியருளுகிறார்.

முனிவனே!

"இருக்கும் உயிர்கள் இத்துணையும் ஒரே நிலையடைய இயலாது. சிலபேர் சிவதருமங்களை அறிந்து அநுஷ்டிக்கலாம். சிவலோகத்தையடையலாம். சிலபேர் சிவஞானம் பெற்றுத் திருவடியைத் தரிசித்து திருவடிப்பேறு அடையலாம். ஆகவே மக்களுடைய பரிபாகத்தையுணரவும், அவர்கள் அறிந்து உய்யவுமாக, சிவபெருமானே இருபத்தெட்டு ஆகமங்களை அருளிச் செய்தார். அவற்றுள் ஒன்று சந்தானம் என்பது. இது சந்தான சர்வோத்தரம் எனவும் அழைக்கப்படும். இந்த ஆகமத்தின் உபாங்கங்கள் ஐந்து. அவை ஈசானம், சிவதருமம்,

சிவதருமோத்தரம், திவ்யப்ரோக்தம், குபேரம் என்பன. இவற்றுள் சிவதருமோத்தரத்தை உனக்கு உபதேசிக்கலாமென்று எண்ணுகிறேன்."

ஒன்று மிகமிக இன்றியமையாதது. அதுதான் சிரத்தை என்பது. சிரத்தைக்குப் பலபெயர் உண்டு. பக்தி, பிரபக்தி, பாவம், பரமப்பிரீதி, காதல், அன்பு, என்றெல்லாம். ஆகவே, நீ சிரத்தையோடு கேட்பதால், காதலாகிக் கசிந்து கேட்பதால் கருணையோடு மொழிகின்றோம். ஓர் உண்மையைக் கேள்.

எத்தகைய நோன்பு விரதங்களை அனுஷ்டித்தாவது, பணத்தைக் கொண்டாவது, பண்டத்தைக் கொண்டாவது, பூசை முதலான செய்தாலும், அன்பில்லாத பூசை அணுவளவும் பயன் படாது. தினையளவு தானம் செய்தாலும், கணப் பொழுது கடவுளை நினைத்தாலும், உள்ளன்போடு நினைத்தால், உறுதியாக நினைத்தால் அதன் பயன் அளப்பில. ஆதலால் நீ அன்பொடு கேட்பதால் யாம் இரக்கத்தொடு சிவவாக்கியத்தைக் கூறுகின்றோம்.

சிவவாக்கியம் ஆசையுடன் கேட்பவரின் அவலத்தைப் போக்குவது, மோகத்தைக் கெடுப்பது, மனம் முதலிய அந்தக் கரணங்களைத் தூய்மையுறுத்துவது. பொய்த்தவரைப் பொருந்தாமல் மெய்த்தவரொடு பொருந்தச் செய்வது. துன்பம் துடைப்பது. பதி, பசு, பாசமென்ற முப்பொருளை விளக்கும் மொழிவடிவானது.

எழுத்தால் சுருக்கமுடையது. பொருளால் பெருக்கமுடையது. காவியங்கள் செய்யும் கவிஞரின் வார்த்தை போல விபரீத ஞானத்தை விளைவிக்காதது. போகமும், மோட்சமுமாகிய இரண்டையும் எளிதில் அளிப்பது, போகங்களைப் பொசித்துத் தொலைத்தபின் பிறப்பு இறப்பில்லாத நித்தியானந்த வடிவான பரம மோட்சத்தை அளிப்பது.

இத்தகைய சிவ வாக்கியத்துள் சிவாகமங்கள் மிகச் சிறந்தவை. சிவாகமங்கள் எல்லாவற்றுள்ளும் மணியுள் ஒளி போல விரவிநிற்பது சீ பஞ்சாக்கரமாகிய 'ஓம் சிவாயநம' என்பது ஓம் நமசிவாய என்பதும் அதுவே இதன் பொருள் ; எல்லா உயிர்களுக்கும் அறிவை விளக்குபவனும், தனக்கொப்பார் யாருமில்லாத தனிப்பெருந் தலைவனும், ஊழிவரை நிறைந்த ஒளியாய் நிற்கும் சிவபரம்பொருளே இதன் பொருள். இவ் ஐந்தெழுத்தையும் ஈசானம் முதலிய ஐந்து பொருள்களைத் தரும் ஐந்து

பதங்களாக எண்ணி உச்சரித்தால் இருமையின்பத்தை எளிதில் அடையலாம்.

ஓம் !

ஆலம் வித்து மிகச் சிறியது. தரையில் கிடந்தால் கிள்ளித் தான் எடுக்கவேண்டும். அவ்வளவு சிறியது அது. பதினுயிர கணக்கான உயிர்கள் அண்டிப் பிழைக்கும் பெரிய மரமாக வில்லையா? அதுபோல ஓம் என்னும் எழுத்து இரண்டரை மாத்திரை பெற்ற சிறிய பதம்தான். அதிலிருந்துதான் வேதங்கள், சிவாகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள் அளவற்ற கலை நூல்களெல்லாந் தோன்றின. இவ்வளவு விரிந்து பரந்த ஒளியுலகு அனைத்தும் ஒடுங்குகின்ற காலத்து ஓம் என்ற இதிலே ஒடுங்குகின்றன. அதனுலேயே அனைவரும் இதனை எண்ணுகிருர்கள். மனிதன் எதைச் செய்தாலும் விழித் தாலும், தூங்கினுலும் வேதனைப் பட்டாலும் விடுகின்ற மூச்சுக் காற்றை ஓம் எனும் சாதனையோடு விடுவானுயின் எல்லாம் கற்றவனுக, அறிந்தவனுகின்ருன். அதனுலேயே இது பீச மந்திரங்களுக்கு வித்து என்று பேசப்படுகிறது.

சிபஞ்சாக்கரத்தை எல்லாரும் எண்ணலாம்; ஆனுல் தூய்மை யும், அன்பும்தான் தேவை.

ஓங்காரம் சூக்குமபஞ்சாக்கரம். இது ஐந்தொலிகளின் கூட்டுறவால் ஆனது. ஆதலால் ஆன்மாக்களின் ஆணவ இருளைப் போக்கி அறிவை விளங்கச்செய்யும். இது இறைவன் வடிவே என்றும், இதன் பொருள் இறைவன் என்றும் இயம்பப் படுகிறது. இதனை நமக்கு உபதேசிக்கும் ஞானுசாரியனும் இப் பிரணவத்தின் பொருளாகிருர்.

குருநாதன் வழியே மன்னன் கேட்டு நாட்டை நீதியொடு ஆளுகிருன். மன்னன் வழி மக்கள் ஒழுகுகிருர்கள். அதனுல் உலகமே இடருறுகிறது. இதனுலேயே நமது சமய ஆச்சார்யப் பெருந்தகைகள் மன்னர்களை ஆட்கொண்டனர். அருள் வழிப் படுத்தினர். அதனுல் உலகம் உய்ந்தது.

மன்னர்கள், ஆட்சிபீடத்தையலங்கரிப்பதால் கோப தாபங் கட்கும், விருப்பு, வெறுப்புகட்கும் அடிமையானவர்கள்; பேரா சைக்கு இடமானவர்கள். அவர்களைத் திருத்துவதும், அவன் வாயிலாக மக்களைத் திருத்துவதும் மிகமிக அருமையான செயல்

என்பதை அருளுள்ளத்தில் கொண்டு, மருந்தாலும், மந்திரத்தாலும், அற்புதங்களைச் செய்து காட்டி, அவன் செருக்கடங்கி திருவடி அடைந்த பின்பு உணர்த்தக் கூடிய அளவு உண்மை ஞானத்தையுணர்த்தி, அதனை அவர்கள் தேர்ந்தபின் உரைத்து, நின்றபின் ஞானயோகத்தை அருளிச் செய்வார்கள். அதனால் உலகம் திருந்தும் உயரும்.

ஞானம் என்பது தன்னையும், தலைவனையும், தடையையும் உணர்தல். தடை நீங்கி தன்னிடத்தில் வேறன்றி கலந்து நிற்கும் கடவுளையடைதற்கு விரும்பும் மாணுக்கனுக்கு சிவஞானத்தை உபதேசிப்பன் ஆசாரியன். கேட்ட மாணுக்கனும் முதிர்ந்த கனிபோல, சாணை பிடிக்கப்பட்ட வைரம்போல், ஒளியும், சுவையும் மிக்குத் தானே தானுயிருந்து பழகிப் பிறரும் அந்நிலையை அடைய அருளுவன். ஒருபொழுதும் பொருளுக்காகவும், புகழுக்காகவும் போகங்களுக்காகவும் தம் நிலையைத் தன் அனுபவத்தையும் தத்தஞ் செய்யமாட்டார்கள். புகழும் பொருளும்சிவானுபவத்திற்குப் பெரிய முட்டுக்கட்டை என்றருளிச் செய் ார் முருகன். அகத்தியர் குருபரனுடைய கருணை நோக்காலும் உபதேசத்தாலும் உள்ளொளி பெற்று, சிவஞானத்தையடைதற்குரிய உபாயம் யாது? அதனையும் அருளிச் செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்.

முருகப் பெருமான், "முதற்கண் செய்யவேண்டியது சிவபூசைதான், அதனைப் பற்றி விரிவாகக் கூறுகின்றோம்" கேட்பாயாக என்று அருளிச் செய்கிருர்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi.

இன்று இறைவனையும், இறைவியையும் வாழ்த்தி வணங்கி வழிபட நற்பேறு கிட்டியது. இந் நாளை என்றென்றும் போற்றிக்கொள்வேன்.

(ஒ-ம்.) முத்து. இராசாக்கண்ணனுர்,
22—1—72. தமிழ் வளர்ச்சி இயக்குனர்.

திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி

மூலமும் – உரையும்

உரையாசிரியர் :-

பண்டித வித்துவான், தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை

(மலர் 31. இதழ் 3. பக்கம் 120 இன் தொடர்ச்சி)

தேவரஞ்சி தச்சுடர்மா மணிமகுட
முடிதடவுந் திருத்தாள் சிந்தித்
தேவரஞ்சி தடனேன் பெற்றுய்யுநா
ளென்றுளதோ செழும்பூ வத்தத்
தேவரஞ்சித் தனுவழிய விழித்தரியா
தியர்வாழ்வு சிறக்கச் செய்மா
தேவரஞ்சி தச்சொலறம் வளர்த்தவளோ
டையாற்றிற் றிகழும் வாழ்வே. 30

(இ - ள்) செழும்பூ அத்தம்தேவர் அஞ்சி தனுஅழிய விழித்து - நல்ல பூக்களாகிய ஐந்து அம்புகளை (பஞ்பாணங்களை) பூவாகிய வில்லோடு கொண்ட கைகளையுடைய கருவேளாகிய மன்மதன் பயமுற்றுத் தன் உடல் சாம்பர்ப்பொடியாமாறு நெற்றிக்கண்ணால் விழித்து (அழித்து), அரி ஆதியர் சிறக்க செய் - திருமால் முதலிய தேவர்கள் வாழ்க்கையினை இனிது சிறப்புறச் செய்த, மாதேவ - மகாதேவரே (பேரிறைவரே) (இ) ரஞ்சிதம்சொல் - அஞ்சொல்லாளாகிய, அறம்வளர்த்தவளோடு - இருநாழி நெற்கொண்டு முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்த பெற்றியால் அறம்வளர்த்தநாயகியார் எனும்அருமைத் திருநாமம் பூண்ட அம்மையாருடன், ஐயாற்றில் திகழும் வாழ்வே - திருவையாற்றில் (தேசோமயமாய்) செம்பொன் சோதியாய் விளங்கும் ஏனையர் வாழ்த்தி வாழ்வதற்காக வாழ்கின்ற பேரின்ப வடிவரே, தேவர் அஞ்சு இதம் சுடர் மாமணி மகுடம் - கடவுளர்கள், அஞ்சு விதமாக இனிய வேலைப்பாட்டுடன் கூடிய ஒளிவிடுகின்ற பெரிய நவரத்தினங்கள் இட்டுப் பதித்து இழைக்கப்பட்ட மகுடங்களைத் தரித்தமுடிகள், தடவும் - உராயப்பெற்ற (இடையிடின்றி நண்ணும் தேவர்கள் திருவடிகளில் வீழ்ந்து வணங்குதலால் தடவும்) திரு தாள் சிந்தித்து ஏ வரம் சிதடனேன் பெற்று உய்யும்

நாள் உளது ஓ - திருவடிகளையே நீளநினைந்து பேரன்பு உறலாகிய வரத்தினை. அறிவிலியாகிய ஏழையேன் அடைந்து கடைத்தேறுநாள் என்று கிட்டுதலைப் பொருந்துமோ? அறியப் பெற்றிலேன் (எ - று)

(கு - ரை) பூளைவீ அன்னதன் ஆகம் வெந்து அன்று தொட்டு அநங்கனே ஆயினன், என்பதும், தழலெழவிழித் தனன் சாம்பராயினன் என்பதும் "செழும்பூ அத்தம் தேவர் அஞ்சி தனு அழிய விழித்து, என்பதனை வலியுறுத்தும் இதனாலன்றோ இறைவனுக்கு, காமாரி, என ஒரு திருநாமம் உண்டென்பது புலனாகா நிற்கும். காமனை வென்ற வாமனை வழிபடுவோர் காமன் வாதனை யினின்று கழலப்பெறுவர் என்பது ஒருதலை. சிதடன் - அறிவிலாதவன். இரஞ்சிதம் - அழகு. மன்மதன் எரிபட்டமையால் செவ்வேட் பரமன் திரு அவதாரம் புரிந்தனர். தனு - உடம்பு. உய்தல் - கடைத்தேறல் (எ - று)

வாழ்வனைத்துந் தருங்கருணை
வாரிதியே யையாரு
சூழ்கருங்கட் டுவரதரச்
சுரிகுழலா ரல்குன்மயற்
பாழ்வலையிற் படுவேனின்
பழவடிய ரொடுகூடி
யேழ்பவமற் றருளுறநின்
இணையடியே நம்பினனே. 31

(இ - ள்) அனைத்து வாழ்வும் தரும் கருணை வாரிதிஏ - எல்லா வாழ்க்கைச் செல்வங்களையும் கொடுத்தருளும் கருணைப் பெருங்கடலானவரே. ஐயாரு - ஐயாற்றரசே, சூழ்கரும் கண் துவர் அதரம் சுரிகுழலார் - சுழற்சியுடைய கரிய கண்களினையும் பவழம் போன்ற உதடுகளையும் நெறிப்பினையுடைய கூந்தலினை யும் உடைய இளையநங்கையர் தம், அல்குல்மயல் பாழ்வலையில் படுவேன் - அல்குலாகிய மயக்கத்தினையுடைய பாழ்போன வலையிற் சிக்குண்டவன், நின் பழ அடியரொடு கூடி - தேவரீ ருடைய தொன்றுதொட்ட தொண்டரொடும் கூடி, ஏழ்பவம் அற்று - வினைப்பயன் தொடரும் பிறவிப் பெரும்பிணி நீங்கப் பெற்று, நின் அருள் உற - தேவரீருடைய திருவருளைப்பெற, இணை அடியே நம்பினன் - இருதிருவடிகளையே உறுதியாக நம்பியுள்ளேன். திருவருள்புரிக. (எ - று)

(கு - உரை) துவர் - பவழம். சுரிகுழல் - நெறிப்பினையுடைய கூந்தல். அதரம் - உதடு. மயல் - அறிவுமயக்கப்பெறல், (உள்ள தன் தன்மையறியப் பெறுமை) ஐயாறு - பஞ்சநதி. இதனைப் பஞ்சநதமென்பது உலக வழக்கு. பழமை - தொன்மை. 'புத்தடியோம் புன்மை தீர்த்து ஆள்கொண்டால் பொல்லாதோ' என்பது திருவாசகம். புதுமை, புதியராகவந்தவர். பாழாதல்-சூனியமாதல்) எழுபவம் - ஏழ்பவம் (எழுமை எழுபிறப்பு) என்பது நோக்குக. பவம் - உண்டாதல். பிறவி. (பிறத்தல்) படுதல், சிக்கித்தவித்தல்

"இலவு இதழ்வாய் வீழ்வார் அவர்தம்
கலவி கடைக்கணித்துங் காணேன் - இலகுமொளி
ஆடகஞ்சேர் அம்பலத்தே ஆளுடையார்நின்றாடும்.
நாடகம் கண்டு அன்பான நான்". (11 திருமுறை.)

இளமகளிர் தம் உதடுகட்குக் கொவ்வைக்கனியையும் பவழத்தையும் உவமிப்பது போன்று செவ்இலவமரத்தின் பூவினையும் கொண்டுளார். (நெறிதருகுழலையறல் என்பார்கள்' இதனையே சுரிகுழலார் என்றனர்) சூழ் - சுழலல், வலை - வெளியிற் போகாவாறு சிக்குமாறு பின்னப்பட்டது. ஏகாரம் - ஈற்றசை "தொண்டரொடு கூட்டுகண்டாய்" என்பதும் ஆயதற்பாலது. (எ - று)

நம்பியுனைப் போற்றறியா
நாயேனை வலியவந்தென்
வெம்புமனத் துயரகற்றி
வினைவேரைக் களைந்தயனோ(டு)
அம்புயவம் பகனுணரா வடிகாட்டி
யாண்டு கொண்டாய்
வம்புமிகும் மலர்ச்செழுங்கா
வயங்குமையாற் றெழிலிறையே. 32

(இ-ள்) வம்புமிகும் செழுமலர்கா - நறுமணம்கமழும் செழித்த மலர்களையுடைய பொழில்கள் (புடைசூழப்பெற்று) வயங்கும் ஐயாற்று எழில் ஐயாறு! - விளங்கும் திருவையாற்றுத் திருப்பதியின்கண் அமர்ந்தருளிய அழகிய சிவபரம்பொருளே; உ(ன்)னை நம்பி போற்ற அறியா(த) நாயேனை - (மற்றொரு கடவுளை விழையாது) தேவரீரையே உறுதியாக நம்பிக்கொண்டு துதிபுரிதற்கு அறிய மாட்டாத நாயினேனை (கடையவனை) வலியவந்து - தாமாகவே எழுந்தருளிவந்து (குருவடிவாக வந்தருளி) என் வெம்பு(ம்) மனம்துயர் அகற்றி-ஏழையேனுடைய

வெதும்புதலுற்ற மனத்தின்கண் உள்ள துன்பமாயின அனைத்தை தையும் ஒருங்கே போக்கி. வினை வேரைக்களைந்து - பிறவிக்குக் காரணமாகிய இருவினைகளின் மூலத்தை மேன்மேல் எழாத வாறு பிடுங்கியெறிந்து, அம்புயனோடு அம்புய(ம்) அம்பகன் - திசைமுகனும் (பூமேலயனும்) தாமரைக்கண்ணனாகிய திருமாலும், உணரா - அடிமுடி தேடி யறியமாட்டாத, அடிகாட்டி - திருவடிக் காட்சி தந்தருளி, ஆண்டு கொண்டாய் - சிவஞானந்தந்து ஆட்கொண்டருளினீர். ஈது ஒரு பெருவியப்பேயன்றோ. எ - று.

(கு - ரை) போற்றுதல் - இறைவனை நிறைமனத்தொடு வணங்கல். வெதும்புதல் - வறிதே பயனின்றியாதல். வினை - இருள் சேர் இருவினைகள். நல்வினை தீவினைகள், இவ்விருவினைகளும் பிறவிப்பெரும்பிணிகளையுண்டாக்குவன. வலிய வரலாவது - வேண்டாதபோது வேண்டி வருவது; தானேயுவந்து வரலாம். அம்புசம் நீரிற்றோன்றுவது. அஃது அம்புயம் எனத் தற்பவமாயிற்று, அம்பகம் (நயனம்) கண். புண்டரீகாட்சன் என்னும் பொருட்டு அம்புய அம்பகன் என்பது. வம்பு - மணம். "திருமாலும் பன்றியாச்சென்றுணராத் திருவடி, என்பது திருவாசகம். வியங்கும் - விளங்கும். இறை - எல்லாவுயிர்களிடத்துஞ் சென்று தங்குபவன். வம்புமிகும் மலர் - நால்வகைப் பூக்களாம். கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, புதற்பூ. (நிலப்பூ) என்பனவாம். இவற்றோடு உற்றனவே எட்டு நாள் மலர்கள்!

(வளரும்)

பொன்மொழிகள்

தமிழுக்கும் கடவுளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. தமிழ் மொழியே உடல்; கடவுட் கொள்கை அதன் உயிர், உயிர் இல்லாத உடம்பு சடம், அறிவற்றது. அசைவற்றது. அழகற்றது, ஆற்றலற்றது. இதனை உணர்ந்தே மொழிக்கு எல்லாம் முதலாகிய அகரமாக இறைவனைக் கண்டார்கள்.

—ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள்.

" கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான் "

வித்துவான். திருமதி. ப. நீலா

(மலர் 31, இதழ் 2, பக்கம் 134 இன் தொடர்ச்சி)

47. கரிக்குருவிக்குபதேசம் செய்தது

பன்றிக்குட்டிகளை அமைச்சர்களாக்கிய பசுபதியால் கரிக் குருவி குருமொழி கேட்டருளடைந்த கதை பகர்வாம்.

மன்னவன் இராசராசன் மேலுலகம் சென்றபின் பெருவலி மடங்கலொத்தவனை சுகுண பாண்டியன் நிலவுலக ஆட்சி பெற்று தண்குடை நிழலில் உலக உயிர்களைக் காக்க ஒருப் பட்டான். அவனுடைய ஆட்சிக் காலத்தில்தான் இந்த அற்புதம் நிகழ்ந்தது.

நல்லவன் ஒருவன்; அநேக நன்மைகளைச் செய்த பலனை அனுபவிக்க முடியாமல் சிறிது பாவம் செய்யவே இப்புவியில் கரிக்குருவியாகிப் பிறந்தான். பறவைகளுக்கெல்லாம் எளியதான இதனுடன் காகம் முதல் எல்லாப் பறவைகளும் வருத்திச் சண்டையிடும். அதனால் குருதியொழுகும் தலையுடன், நாணத் துடன் சோர்ந்துபோய் ஒருநாள் ஒரு மரக்கிளையில் அமர்ந்து கொண்டிருந்தது.

அப்போது உள்ளும் புறமும் தூயவனொருவன் மெய்யெல் லாம் நீறுபூசி, கண்டியணிந்து, கையில் குடையுங்கொண்டு தீர்த்தயாத்திரை செய்து வருகின்றவனாக அம்மர நிழலுக்கு வந்தான். அந்நிழலில் நின்றிருந்த சிலரிடம் தன்தீர்த்த யாத் திரை அனுபவங் கூறுவான்போல் தொடங்கினான். தீர்த்தம், தலம், மூர்த்தி என்ற இம்மூன்றின் சிறப்பும் ஒரே இடத்தில் இவ்வுலகில் உண்டென்றால் அத்தலம் மதுரைதான். மதுரை தலத்தால்; பொற்றாமரை - தீர்த்தத்தால்; சுந்தரேசப் பெருமா னென்ற மூர்த்தியால் யாவராலும் கொண்டாடப்படும். இம்

மதுரேசன் சேவித்து ஏத்துவார்க் கெளியனுகிக் †கையிலுள்ள நெல்லிக் கனிபோல வேண்டிய வரங்களும் தருவான். மற்றைய தலத்திலுள்ள தெய்வங்கள் அம்மைப் பயனுக்கே ஆதரவு தர; இத்தலத்திறைவனே இம்மைக்கே உதவுவான். இப்படி அந்தத் தூயவன் மற்றவர்களிடம் சொல்லிக்கொண்டிருந்ததை மரத்திலிருந்த கரிக்குருவியும் கேட்டுக்கொண்டது. ஞானம் கைவரப்பெற்ற குருவி உடனே மதுரைக்குப் புறப்பட்டுப்போய் கனகஞ்சப் புனலைத் தோய்ந்தது. இறைவனையும் பிராட்டியையும் வணங்கி வலம் வந்தது.

இப்படி முறையாக மூன்று நாட்கள் குருவி வழிபட்டபின் பார்வதி இறைவனிடம் இக் கரிக்குருவியின் வரவு யாது! இது வழிபடுவது எதற்கு - என்று கேட்க, பெருமானும் அவளுக்குக் குருவியின் வரலாற்றைத் திருவாய் மலர்ந்தான். பின்பு தன்னை வழிபட்ட கரிக்குருவிக்கு முன்பு மறைக்குழவியாம் மார்க்கண்டேயனுக்கு நித்யத்துவத்தைக் கொடுக்கக் காலனைக்காய்ந்த மிருத்யுஞ்சய மந்திரத்தை உபதேசித்தார். உவமையற்றவனும் எம்பெருமான் உபதேசித்த மந்திரம் கைவரப்பெற்றதும் பிறவித் துன்பம் தொலையப்பெற்று அவன்கழல் வழுத்திற்று.

எண்ணிலாவுயிர்க் கிறைவனே! வான் தண்ணிலா மதிச் சடையனே! என் புண்ணியத்தின் பயனே - என்றெல்லாம் விளித்து வணங்கி மகிழ்ந்தது. எளியவர் எங்குள்ளாரென்று தேடித்திரிந்து அருளுவது உன் பெருமைக்குப் பின்னும் புகழ் சேர்க்கும். ஆயினும் எனக்கோர் குறையுண்டு, எல்லாப் பறவைகளுக்கும் எளியவனுக இருந்த என்னை அப்பறவைகள் கூடிப் படுத்தினபாடு சொல்லுந்தரத்ததல்ல. இப்படி, குருவி வருந்திச் சொன்ன குரல் செவிப்படா முன்பே இறைவன் ‘ இனி நீ வலியான் ஆவாய்! என்றருளினர்,

கரிக்குருவி அது கேட்டு மன மகிழ்வு கொண்டாலும் நிறையாத உள்ளத்தோடு பின்னும் வேண்டு கோளொன்று தொடுத்தது. “ ஐயனே இப்பெயர் என் மரபினோர்க்கும் நிலைக்க வேண்டும். அதோடு இம்மந்திரத்தை நாங்கள் ஓதி துன்பவிடுதலை பெறவும் வேண்டும் ” — என்று கேட்டுக்கொண்டது. பிரானும் அதற்கிசைந்து ஒப்புதல் தந்தான்.

---

† அங்கையில் நெல்லி என்பது - உறுதி குறித்ததாகும். பாலை நிலவழி ஏகுவானுக்குத் தன்கையிலுள்ள நெல்லிக்கனி நிச்சயமாகப் பயன்பட்டு விடாய் தணிக்குமல்லவா. இதுகுறித்து இம்மொழி எழுந்தது.

குருமொழி பயின்ற குருவி வலியானுயிற்று. இறைவனடியை மிருத்யுஞ்சய மந்திரம் ஓதி அடைந்தது. இக்கரிக்குருவியின் செய்கையைக் கொண்டுதான் உலகில் 'தக்கவன் ஒருவன் வாழத் தன்கிளை வாழும் - என்ற பழமொழி எழுந்தது.

இறைவனடிக்கு அன்பு வைக்காதவன் எளியன். அவனடியில் அன்புகொண்டவன் வலியன். இக்கருத்து, கண்ணுதலின் கழல்களில் அன்பின்றித் திரிந்த எளிய குருவி அவனருள் பெற்றபின் வலியானுகி விளங்கியதிலிருந்து தெளிவாகிறதல்லவா. (வளரும்)

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் பொன்மொழிகள்

திருவருள் ஆற்றல் உலகத்தை வாழ்விக்கிறது. உலகம் இயங்குவது திருவருளால். அருளின்றேல் யாதொரு பொருளும் அசைவதில்லை. அருளிருந்தால் அணுவளவான பொருளும் அண்ட சராசரங்களாய் விடும்.

❋ ❋ ❋

ஞானசாரியனே பெருமான் திருவருளை வாரி வழங்கி ஆட்கொள்கிருன். ஆகவே குருவருளும் உயிர்க்கு உற்ற துணையாகிறது. திருவருளும் குருவருளும் உயிரைச் சிவானந்தக் கடலில் திளைக்கச் செய்கின்றன.

❋ ❋ ❋

தமிழ் மொழியே உடல்; சைவமே உயிர்; தமிழ் மொழியே மலர்; சைவமே மணம்; தமிழ் மொழியே வீணை; சைவமே இசை; உயிரும், மணமும், நாதமுமாகத் தமிழ் மொழியோடு ஒன்றுபட்டு வளர்ந்து வந்திருக்கிறது நம் சைவ சமயம்; சைவம் இன்றேல் தமிழ் இல்லை. சிவமணமே செந்தமிழை வாழ்விக்கிறது.

❋ ❋ ❋

பற்று நீங்க வேண்டுமானுல் பற்றற்ருன் பற்றினைத்தான் பற்ற வேண்டும். அவன் பணி செய்ய வேண்டும்; அவனை எந்நாளும் நினைக்க வேண்டும்; மனக்கவலை நீக்கும் அவன் மலரடி; பாசமானகளையும் அவன் பாததாமரை; தனக்குவமை யில்லாத அத்தண்ணருளாளனின் பேரருள் வரம் எய்தலாம்.

இருவகைப் புணர்ச்சியில் : : : எழுத்துப்பேறும் சாரியையும்

டாக்டர். திரு. சோ. ந. கந்தசாமி M.A., M.Litt. Ph.D.

(மலர் 31, இதழ் 2, பக்கம் 124 - இன் தொடர்ச்சி)

2. உகரம் - அளப்பெடையில் வருதல் :

தொல்காப்பியர்,

‘ ழகர உகரம் நீடிடன் உடைத்தே
உகரம் வருதல் ஆவயி னான ’ (உயிர். 261)

‘ குற்றெழுத் திம்பரும் ஓரெழுத்து மொழிக்கும்
நிற்றல் வேண்டும் உகரக் கிளவி ’ (உயிர். 267)

எனவரும் நூற்பாக்களில் அளபெடையில் வரும் உகரத்தினைச் சுட்டினர்.

எ-டு. எழூஉக்கதவு; குழூஉக்களிறு (புறம். 97), பழூஉப்பல் (குறுந். 180) உடூஉக்குறை தூஉக்குறை

நன்னூலார் இங்ஙனம் விதித்திலர்.

III, IV, எகர, ஒகரம் அளபெடையில் வருதல் :

ஏகார, ஓகார ஈற்று முன்னிலை வினையிலும், தேற்றமும் சிறப்பும் கண்ணிய பெயரீற்றிலும் நிலைமொழிக்கண் தோன்றும் எகர, ஒகரம் (தொல். உயிர். 272, 273) அளபெடையில் வந்தன வாகவே கொள்ளுதற்கு உரியன.

எ-டு. ஏஎக் கொற்று, ஓஒக் கொற்று
யானேஎ கொண்டேன், அவனோஒ கொடியன்

‘தேற்ற எகரமும் சிறப்பின் ஒவ்வும்’ (உயிர். 273) என்றமையான் அப்பொருள் உணர்த்தும் ஏகார ஓகார இடைச்சொற்களின் பொருளையே அவை சார்ந்துவரும் எகர ஒகரம் தாங்கின என்பது தெளிவு.

இனி வேற்றுமைப் புணர்ச்சியில் ஏஎக்கொட்டில், ஓஒக் கடுமை, (உயிர் 277, 292) என்பனபோல் வருவனவற்றுள் நின்ற எகர ஒகரமும் அளபெடையில் வந்தனவே.

நன்னூலார் இப்புணர்ச்சிகளைப் புறக்கணித்துவிட்டார்.

V னகரப்பேறு :

நீன் > நின் (தொல். உருபு 179), ஆன், மான், ஊன் (உயிர். 231, 232, 233, 269) என்பனவே பழஞ்சொற்கள் ஆதல் வேண்டும். எனின், ஆசிரியர் 'நீ' நெடுமுதல் குறுகியும், ஆ, மா, ஊ என்பன இயல்பாயும் நின்று னகரம் பெறும் என்றார். 'நீ' உருபுடன் புணருங்கால் பெறும் னகரத்தை எழுத்துப் பேறு என எண்ணினர் நச்சினார்க்கினியர் (தொல் எழுத்து 179) மொழியிறுதியில் னகரம் வரின் விடுபடுதல் உண்டு. சான்றாக, ஓடினான் என்புழி இடைநின்ற னகரம், ஓடி என்புழி மறைதல் காண்க. எனவே, நீ ஆ, மா, ஊ முதலியசொற்களின் இறுதியில் நின்ற னகரம் அவ்வச் சொற்கு உரியதென்றும் புணர் மொழியில் வருங்கால் வந்து தோன்றும் என்றும் கருதலாம். புணர்ச்சி விகாரமாகத் தோன்றும் எழுத்துப்பேற்றினைச் சேனா வரையர் தம் உரையில் குறித்துள்ளார். (தொல். எச்ச. 45)

நன்னூலாரும் தொல்காப்பிய எழுத்துப்பேறும் :

1. தொல்காப்பியர் கூறிய அகர எழுத்துப்பேற்றினை நன்னூலார் அகரச் சாரியை என்றே கொண்டனர் (நன். மெய். 208, 212, 215, 217, 223, 231, 247).

2. தொல்காப்பியர் கூறிய உகர எழுத்துப்பேற்றினையும் நன்னூலார் உகரச்சாரியை என்றே கொண்டனர் (நன். மெய். 207, 217, 223, 231, 234, 236).

3. (1) 'நீ' நெடுமுதல் குறுகிப் பெற்ற னகரத்தினை எழுத்துப் பேறெனத் தொன்னூல் கருதிற்று. ஆயின், 'நின்னீறு இயல்பாம்' (நன். மெய். 218) எனப் பின்னூல் பேசியது.

(2) 'இன்' சாரியை 'ன்' ஆயிற்று என்பர் தொல்காப்பியர் (தொல். எழுத்து. 120). எனின், நன்னூலார் 'இன்'னின் வேறாக னகரச் சாரியையினை எண்ணினர். "ஆமா கோ னவ் வணையவும் பெறுமே" (நன். உருபு. 248) என வருதல் காண்க

அ, உ, ஏ, ஐ, கு, ன முதலியன எழுத்துச் சாரியை என்றும், பிற பதச்சாரியை என்றும் மயிலைநாதர் விளக்கினர். (நன். உருபு. 252, பக்கம் 109) இரண்டினையும் பொதுச் சாரியை என்று பவணந்தி பகர்ந்தனர் (நன் உருபு 244.)

நன்னூலார் மாற்றிய சாரியைகள் :

1. அக்கு > அ :

தொல்காப்பியர் விதித்த அக்குச் சாரியையினை நன்னூலார் அகரச்சாரியை என்றே கொண்டனர். தொல்காப்பியத்தில்,

"தாழென் கிளவி கோலொடு புணரின்
அக்கிடை வருதல் உரித்து மாகும்" (புள்ளி. 384)

"தமிழென் கிளவியும் அதனோ ரற்றே" (புள்ளி. 385)

எனவரும் நூற்பாக்களை நன்னூலார்,

"தமிழ் அவ் வுறவும் பெறும் வேற்றுமைக்கே
தாழுங்கோல் வந்துறுமேல் அற்றே" (மெய். 225)

எனத்தழுவி அமைத்து, அக்கினை அகற்றி அகரம் கொள்ளுதல் காண்க. 'அக்கு' தன் முழுவடிவில் ஒரு சொல்லில்கூட வழங்க வில்லை. தொல்காப்பியரே அக்கின் இறுதி முழுதும் கெட்டு அகரமே நின்று புணரும் என்றார் (தொல். புணர். 128). எனவே, அக்கினை நிறுத்தி இறுதியைக் கெடுத்து அகரத்தைப் பெறுதலின், அகரமே சாரியையாய் நின்று புணரும் என்பது பொருத்த முடைய கருத்தே.

2. இக்கு > கு ?

இகர ஐகார ஈற்றுத்திங்கள், நாள் பெயர்களின் முன் இக்குச் சாரியை வருங்கால் இகரம் கெட்டுப் புணரும் என்றார் தொல் காப்பியர் (126. 127, 248 286). இவ்விற்று இப்பெயர்களுக்கு நன்னூலார் விதி கூறவில்லை. ஒருவேளை, இக்கு கு எனக்கருதிக் குகரச் சாரியை கொண்டிருத்தல் கூடும். எனின், நன்னூல் உரையாசிரியர் இக்கின் திரிபாகக் குகரத்தைக் கருதாமல், தனி நிலையில்தான் கருதினராதல் வேண்டும். பெறுகுவை, செய்குவை முதலிய சொற்களில் வரும் குகரத்தையே சாரியை எனக்கூறுதல் காண்க.

3. வற்று > அற்று :

அஃறிணைப் பன்மைப் பெயர்களில் வரும் வற்றுச் சாரியை சில இடங்களில் வஃகான் மெய்கெட 'அற்று' என்றே நின்று புணரும் என்பர் தொன்னூலார் (புணர் 122) வற்று வழங்கும் இடங்களில் எல்லாம் அற்றினை நிறுத்திப் புணர்க்கவும் விதி இடம் தருதலின், நன்னூலார் அற்றுச் சாரியை என்றே அமைத்தார் (நன். உருபு. 245, 250).

'ஒன்' சாரியை சங்க காலத்தே வழக்கு வீழ்ந்ததுபோலும். ஆதலின், நன்னூலார் அதனை மறந்தார்.

நன்னூலில் புதிய சாரியைகள் :

1. அல் - இச்சாரிகைக்கு நன்னூல் புணர்ச்சி விதி கூற வில்லை. எனின், பரிமேலழகர் 'கானல்' என்புழி இறுதி நின்ற 'அல்' சாரியை என்றார். (பரி. 16 ; 17).

2. இன் > இற்று ஆகும் நிலையினைத் தொல்காப்பியர் சுட்டி யுள்ளார் (தொல். எழுத்து 121, 170). எனின், பவணந்தியார் 'இன்'னின் வேறுகவே இற்றுச் சாரியையினைக் கொண்டனர். (நன். உருபு. 244).

3. இகரச்சாரியை வழங்கும் இடத்தினை,

"தன்ஒழி மெய்ம்முன் யவ்வரின் இகரம்
துன்னும் என்று துணிநரும் உளரே" (நன். மெய். 206)

என்ற நூற்பா வரையறுக்கிறது. நல்லியாழ், பல்லியாண்டு முதலிய பழஞ்சொற்களில் வரும் இகரம் சாரியை என மதிப் பிட்டார் பவணந்தியார்.

'இன்னபிற' என்றதால் உரையாசிரியர்கள் தன், தான், தாம், ஆம், என்பனவும் சாரியை எனக்கொண்டனர். 'ஆ' சாரியை அன்று என்பது இளம்பூரணர், நச்சினார்க்கினியரின் துணிபு. (தொல். எழுத்து 372)

தொல்காப்பியர் தாம் கூறிய சாரியைகள் எல்லாம் இன்ன ஈற்றின் முன் வழங்கும் என விதியமைத்து விரிவாக விளக்கி உள்ளார். நூற்றுக்கணக்கிற் சொற்களை எடுத்தோதிச் சாரி யைப் புணர்ச்சியை அமைத்துக்காட்டினார். ஆனால் பவணந்தியார் தாம் ஓதிய அல், ஏ, கு முதலிய சாரியைகளுக்கு விதி கூறுது விடுத்து, எஞ்சியவற்றிற்கும் சில விதிகளே அமைத்து, 'இதற்கிது சாரியை எனின் அளவின்மையின்' எனக் கையை விரித்துவிடுகிறார்.

தொல்காப்பியம் விளக்க இலக்கணம் என்பதும் நன்னூல் சுருக்க இலக்கணம் என்பதும் தெளிவு.

(அற்று 245 250, இற்று 197 அன் 251, இன் 197, அம் 202 203, 252, தம் 246 நம் 245, நும் 246, ஐ 185, 202, 233 (?), ன 248, அகர இகர உகரச் சாரியைகள் முன் கூறப்பட்டன.)

வாழ்த்தும் அஞ்சலியும்

ஜஸ்டிஸ்
எஸ். மகராஜன்

சென்னை,
12—11—71.

திருவருள் மிக்க மகாசந்நிதானம் அவர்களுக்கு என் அஞ்சலி.

புதுவையில் தங்களிடம் நான் தெரிவித்த என்கனவு, இறையருளால், இன்று நனவாகிவிட்டது.

சிறந்த புலமையும், பக்தியும், பண்பாடும், ஒழுக்கமும், உலகியல் அறிவும், திறமையும் ஒருங்கே அமைந்த திருவருட் செல்வர் ஒருவருக்கு இன்று பட்டாபிஷேகம் ஆகியிருக்கிறது; தமிழுக்கும் சைவத்துக்கும் நல்ல காலம். மிக மிக மகிழ்ச்சி,

நண்பர் மீ. ப. சோமசுந்தரம் வானொலி நிலையத்திலிருந்தே இச்செய்தியை மிக்க ஆர்வத்தோடு தெரிவித்தார்கள். இருவரும் எங்கள் ஆனந்தத்தைத் தொலைபேசியிலேயே பரிமாறிக் கொண்டோம்.

அன்பன்,
எஸ். மகராஜன்.

K. S. வெங்கட்ராமன்,

21 ப்ருதிவி அவின்யூ
மதருஸ்-18,
14—11—71.

ஸ்ரீலஸ்ரீ ஷண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளுக்கு அநேக நமஸ்காரம்; தாங்கள் பீடாதிபதியாக வந்ததைப் பற்றி எங்கள் எல்லோருக்கும் மிகுந்த மகிழ்ச்சி. நம் இந்துமத தர்மங்களை நன்முகக் காப்பாற்றி வளர்ப்பீர்கள் என்பதில் ஐயமில்லை. அதுவும் இந்த நாளில் அது மிகவும் முக்கியமானது.

நமஸ்காரம்,
K. S. வெங்கட்ராமன்.

க. அன்பழகன்
மக்கள் நல்வாழ்வுத்துறை
அமைச்சர்

தமிழ்நாடு அரசு
தலைமைச்செயலகம்
சென்னை-9
25—12—71.

தமிழ்த்திருநாட்டின் தொன்மை வரலாற்றுடன் தொடர்புடையதாகத் தோன்றித் தமிழ்ப்பணியும் சமயப்பணியும் இருகண்களாகக்கொண்டு அறப்பணியாற்றி வருவது தருமை ஆதீனம். ஆதீனத்தின் இருபத்து ஐந்தாம் தலைவராக விளங்கிய கயிலைக் குருமணி அவர்கள் பரந்த நோக்கமும் உயர்ந்த குறிக்கோளும் உடையவராய் ஆற்றிவந்த திருப்பணிகள் பலவும் மக்கட் பணியாய்த் திகழ்வன.

'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே'' என்னும் திருமூலர் திருவாக்கினைப் போற்றி, மக்கள் உடல் நலம் காக்கும் முறைகளுட் சிறந்த, சித்த மருத்துவமுறை-மக்களுக்குப் பயன்பட புள்ளிருக்கு வேளூரில் சித்த மருத்துவ நிலையம் ஒன்றை அவர் அமைத்துதவியது குறிப்பிடற்பாலது.

'திருக்குறள்' உரைகண்டார் பலர். கருத்து வேறுபாடு கட்கும் இடமுண்டு. அவற்றை அறிந்து தெளிய உரைகளின் தொகுப்புநூல் ஒன்றை 'உரைவளம்' என்னும் பெயரில் வெளியிடச் செய்த அவரது தமிழ் உள்ளம் எந்நாளும் போற்றத் தக்கதாகும்.

கயிலைக் குருமணியின் நல்லெண்ணமும் பொதுநோக்கும், அன்பும், பண்பும் எல்லோருடைய உள்ளத்தையும் கவர்ந்தவை என்பது, நான் அவரது விருப்பத்தை அறிந்து ஆதீனத்தில் சங்க இலக்கியத்தைக் குறித்துப்பேசிய நாளில் அறிந்ததாகும். அத்தகைய பெரியாரது பணி, வாழையடி வாழையாக வளரவும் தழைக்கவும், அவரது அடிவழியில் ஒன்றி, உயர்தகுதி சான்ற, வித்துவான். சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் ஆதீனத் தலைவராக அமர்ந்திருப்பது தக்க வழி செய்ததாகும் என்று மகிழ்கின்றேன். தருமை ஆதீனம் மக்கட் பணியால் மாகேசன் பணியினை நிறைவேற்றி, வழிகாட்ட வேண்டுகின்றேன்.

அன்பன்,
க. அன்பழகன்.

மு. கண்ணப்பன்,
அறநிலைய அமைச்சர்

தமிழ் நாடு அரசு
தலைமைச் செயலகம்
சென்னை-9

16—11—1971.

தமிழும் சைவமும் தழைத்தினிதோங்க, அரும்பெரும் தொண்டுகள் ஆற்றிவரும் திருமடங்கள் பல. அவற்றுள், இன்றைக்கு நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் குருஞானசம்பந்தர் என்னும் அருட்பெரும் சான்றோரால் நிறுவப்பெற்ற தருமபுர ஆதீனம், முன்னணியில் சிறந்து திகழ்ந்து வருகின்றது.

அண்மைக் காலத்தில் அவ்வாதீனத்தின் தலைமையேற்று அதனைப் பல்வேறு துறையினும், சீரும் சிறப்புமிக வளர்ந்தோங்கச் செய்து, அருளாட்சி செலுத்தியருளியவர், அவ்வாதீனத்தின் 25-வது குருமகாசந்நிதானமாக விளங்கியிருந்த திருவார் திரு. சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆவர்.

இவர்களின் அருளாட்சிக் காலத்தில், ஆதீனக்கோயில்கள் இருபத்தியேழும் (27), மிகச் சிறந்த முறையில் திருப்பணிகள் செய்யப்பெற்று, அவற்றிற்கெல்லாம் மிக விமரிசையாகத் திருக் குடமுழுக்கு விழாக்களும் நிகழ்த்தப்பெற்றுள்ளன. தேவாரப் பாடசாலை, தமிழ்ப்புலவர் கல்லூரி, வேத சிவாகம பாடசாலை, குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி முதலிய பல கல்வி நிறுவனங்கள் இவர்களால் தோற்றுவிக்கப்பெற்றுச் சிறந்த முறையில் தொண்டாற்றி வருகின்றன. இவர்கள் சென்னைத் தியாகராயநகரில் நிறுவியருளிய சமயப் பிரசார நிலையம், கடந்த பதினெட்டு ஆண்டுகளாக மிகவும் நல்லமுறையில் சமயப் பிரச் சாரப் பணியைப் புரிந்து வருகின்றது. ஆதீனக் கோயில்கள் அனைத்தும் தூய்மையிலும் துப்புரவிலும் இணையற்று விளங்கி, அனைவராலும் புகழ்ந்து பாராட்டப் பெற்று வருகின்றன.

இத்தகைய சிறந்த நிலையில் அருளாட்சி செலுத்திவந்த தருமை ஆதீனத் தலைவர் அவர்களின் பூதவுடல் மறைந்த போதிலும் அவர்களின் புகழ் அருள்உடல் என்றும் நிலைபெற்று விளங்கிவரும். அவர்கள் இனியும் அனைவருக்கும் வழிகாட்டி நலம் புரிந்து வருவார்கள் என்பதில் ஐயமில்லை.

திருவருளிற் கலந்து மறைந்த குருவருளின் துணைகொண்டு இப்போது ஞானபீடத்தில் எழுந்தருளியிருப்பவர், திருவார் திரு சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆவர். இவர்கள் நீடினிது ஞானச் செங்கோல் ஓச்சித் தமிழும் சமயமும் வளர்த்தருள வாழ்த்துவோமாக,

மு. கண்ணப்பன்.

R. NAGASUNDARAM,
Board of Director:
The National Federation of
Industrial Cooperatives Ltd.,
New Delhi.

Rock Fort
Tiruchirapalli-2,
22—11—1971.

நம்முடைய 25வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்ரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பரிபூர்ணம் அடைந்தது தமிழகத்துக்கு ஒரு பெரிய இழப்பாகும். கடந்த 26 ஆண்டுகளாக நினைவில் இருக்கத்தக்க நிலையில் பணியாற்றிய அவர்களை மறக்கமுடியாது.

அவர்கள் எண்ணியபடி பரிபூர்ணம் அடைந்தது காசியில் என்னும்போது 'எண்ணிய எண்ணியாங்கு எய்துப, எண்ணியர் திண்ணியராகப் பெறின்' என்ற குறளுக்கு இலக்கணமாக ஆகிறார்கள்.

குருபூசை விழாவில் ஆயிரக்கணக்கானவர் வந்து சிறப்புச் செய்ததையறிய பெருமகிழ்ச்சியடைகிறேன். 26வது குருமகா சந்நிதானமாகத் தங்களை நியமித்தது மிகவும் பொருத்தமானது.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற குறளுக்கேற்ப தக்கார் ஒருவரை அந்த இடத்திற்குத் தேர்ந்தெடுத்துள்ளார்கள்.

தங்களின் அடக்கமான பேச்சுக்களை, பத்திரிகைகள் வாயிலாக அறிந்து பெரிதும் மகிழ்ச்சியுற்றேன்.

பெரிய புயல் அடிக்கும் இந்தத் தேர்வில் என்றெல்லாம் எதிர்பார்த்தார்கள். மிகவும் சுமுகமாக தங்களைக் கொண்டு வந்தார்கள். காலத்தோடு ஒட்டிப் பழகிய தங்களால்தான் - மக்களோடு நெருங்கிப் பழகிய தங்களால்தான் பல சீர்திருத்தங்கள் செய்ய இயலும் என்பதனைத் தங்கள் அடக்கமான, ஆனால் தீர்க்கமான பேச்சு புலப்படுத்துகிறது. தங்கள் தொண்டு நாளும் சிறக்க வேண்டுகிறேன்.

இங்ஙனம்,
R. நாகசுந்தரம்.

மாயூரம்

சிவநேசச்செல்வர்கள் குரு வழிபாடு

தருமையாதீனம் 26ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகட்கு 1—2—72 செவ்வாய்கிழமை யன்று மாயூரம் சிவநேசச்செல்வர்கள் மாபெரும் வரவேற்பளித்து, வணங்கிக் குருவழிபாடு நிகழ்த்தினர்.

மாயூரத்தையும், அதன் சுற்றுப்புறத்தையும் சார்ந்த அன்பர்கள் பலரும் ஒன்று சேர்ந்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை வரவேற்றுப்போற்றுதற்காகவிழாக்குழுஒன்று அமைத்துச்செயற் பட்டனர். தருமையாதீனத்தின் 26 ஆவது பட்டமாக ஞானபீட மேறிய ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தைப் போற்றும் வகையில் மாயூரத்திலிருந்து 26 கார்களில் ஊர்வலமாக சிவநேசச்செல்வர்கள் காலை 8-30 மணி அளவில் தருமை வந்தடைந்தனர். விழாக் குழுவின் சார்பில் தருமையாதீன ஆன்மார்த்த மூர்த்தி ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் ஆதீன முதற்குரவர் ஸ்ரீ குருஞான சம்பந்தர், ஸ்ரீ தருமபுரீசுவரர், பதினெண் திருக்கரத்துக் கொற்றவை இவர்களுக்கு விசேட அபிடேக - அலங்கார - ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. அன்பர்கள் ஸ்ரீசொக்கநாதப் பெருமான் பூசை மடத்தில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் நிகழ்த்திய பூசையில் – தரிசனத்தில் கலந்துகொண்டு வழிபட்டுப் பிரசாதம் பெற்றனர்.

காலை திருக்கோயில் வழிபாட்டிற்குப்பின்னர், முன்னூற்றுக்கு மேற்பட்ட சிவநேசச்செல்வர்கள், 26 தட்டுக்களில், தேங்காய், பழம், பூ, கற்கண்டு முதலிய மங்கலப் பொருட்களுடன் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தைப் பண்டாரக்கட்டில் தரிசித்து, குருவழி பாடு செய்தபோது, அன்பநாதபுரம் வகையார் அறத்துறைக் கல்லூரி முதல்வர் திரு. M விசுவநாதன் அவர்கள் பொன்னாடை போர்த்தினார்கள். திரு. G. இராமச்சந்திரம் பிள்ளை அவர்கள் மலர் மாலை அணிவித்தார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் சித்திராசனத்தில் எழுந்தருளியிருந்து திரண்டிருந்த அன்பர்களுக்கு, குருவழிபாட்டின் சிறப்பு, சைவ சமயப் பெருமை, ஆசாரிய மூர்த்திகளின் அருளிப்பாடுகள் முதலிய அரும்பெரும் செய்திகள் பலவற்றைத் திருவாய் மலர்ந்தருளி ஆசி வழங்கினார்கள்.

மதியம் ஒரு மணியளவில் விழாக்குழுவினர் சார்பில் திருமடத்தில் மாகேசுவர பூசை சிறப்பாக நிகழ்ந்தேறியது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் எழுந்தருளியிருந்து அன்பர்களை மகிழ்வித்தார்கள். மாகேசுவரபூசைக்குப்பின் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் அன்பர்கள் அனைவருக்கும் ஸ்ரீ சொக்கநாதப் பெருமான், ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருவருட் பிரசாதத்தையும், ஆசாரிய வழிபாட்டின் சிறப்பையும் ஸ்ரீ குருஞானசம்பந்தர் வரலாற்றையும் விளக்கும் 'குருவழிபாடு' என்ற நூலையும் வழங்கி ஆசிவழங்கினார்கள்.

மாலை 6 மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் தருமையிலிருந்து எழுந்தருளி மாயூரம் ஸ்ரீ அபயாம்பிகை உடனுறையும் ஸ்ரீ மாயூரநாதசுவாமி திருக்கோயிற்குச் சென்று வழிபட்டார்கள். வழிபாட்டிற்குப்பின் மாயூரம் சின்ன கடைத்தெருவில் இருக்கும் வீரசேகர விலாசக்கட்டிடத்திற்கு எழுந்தருளினார்கள்.

இரவு 7 மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் வெள்ளி நாற்காலிப் பல்லக்கில் எழுந்தருள, அன்பர்கள் புடைசூழ வரவேற்புவீதியுலா மகாதானத் தெருவின் தென்முனையிலிருந்து புறப்பட்டது. அணிசேர் யானைகள் முன்னே முழக்கமிட்டுச் செல்ல, எழில்மிக்க எடுபிடிகள் இருமருங்கும் சூழ நாதசுர முழக்கம் நல்லிசைகூட்ட, ஒளிவெள்ளத்தின் ஊடே ஆயிரக்கணக்கான சிவநேசச் செல்வர்கள் உடன்வர, வாணவேடிக்கைகள் வனப்புக் காட்ட, ஊர்வலம் ஊர்ந்து சென்றது. மகாசந்நிதானத்தின் பெருமைகள் பேசும் வனப்புமிக்க வரவேற்பு வளைவுகள், மாவிலைத் தோரணங்கள், வரவேற்புப் பந்தல்கள், வண்ண விளக்குகள், வாசலெலாம் கோலங்களுடன் நகரே விழாக்கோலம் பூண்டு விளங்கித் தோன்றியது.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்திற்கு அருகில் திருமுறை வாணர்கள் திருமுறைகளைப் பண்ணிசையுடன் ஓதிவந்தது குறிப்பிடத்தக்கதாயிருந்தது. பல்வகையான மக்களும் கண்டு இன்புறும் வகையில் வீதியுலாவிற்கு முன்னர் சென்ற பொய்க்கால் குதிரை யாட்டம் மக்களுக்கு மகிழ்ச்சியைத்தந்தது.

மகாதானத்தெருவில் உள்ள தேசிய உயர்பள்ளி வாசலில் அலங்காரப் பந்தலிட்டு பூரணகும்பத்தோடு பள்ளி நிர்வாகிகளும் ஆசிரியர்களும் மகாசந்நிதானத்தை வரவேற்றுப் போற்றினர். மாயூரம் வழக்குரைஞர் திரு. M. வெங்கடாசலம் பிள்ளை உயர்பள்ளி சார்பில் வாழ்த்துப்பா ஒன்று வாசித்தளித்தார்.

அன்பர்கள் பலரும், தத்தம் இல்லத்தின் முன்னர் பூரண கும்பம் வைத்து வரவேற்று மகாசந்நிதானத்தின் திருவடி வணங்கி விபூதிப்பிரசாதம் பெற்றனர்.

வீதியுலா துலாக்கட்டத்தருகில் பெரியகடைவீதியில் திரும்பி காவிரி நதியைக்கடந்து திருவழுந்தூர் வள்ளலார்கோயில் அருகில் சென்று இடப்புறம் திரும்பி இரவு 10 மணி அளவில் திருவழுந்தூரில் இருக்கும் அன்பநாதபுரம் வகையார் அறத் துறைத் திருமணக்கூடத்தை அடைந்தது.

திருமண மண்டபம் வண்ண வண்ண மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பெற்று ஒளி பூத்து நின்றது. திருமண மண்ட பத்தின் வாசலில் பூரணகும்ப மரியாதையோடு ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்தை விழாக்குழுவினர் வரவேற்று வணங்கினர். பாராட்டுவிழா மண்டபத்தில் வண்ண மலர்களால் விமான வடி வில் அமைக்கப்பெற்றிருந்த மலர் மேடையில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நி தானத்தில் எழுந்தருளி கொலுக்காட்சி வழங்கினார்கள். வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான். ஸ்ரீமத். இரமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் கொலு வழிபாடு நிகழ்த்தினார்கள்.

பாராட்டு விழா !

இரவு 10-00 மணியளவில் பாராட்டுவிழா நிகழ்ச்சிகள் தொடங்கப்பெற்றன. தருமபுரம், திரு. வேலாயுத ஓதுவார் ,திரு. சாமிநாதன் இருவரும் கடவுள் வணக்கம் பாடினர். விழாக் குழு வினரின் சார்பில், திருச்சிற்றம்பலம், திரு. மு. அருணாசலம்பிள்ளை எம். ஏ., அவர்கள் தருமையாதீனத் திருமரபின் வரலாற்றைச் சுருங்க விளக்கி, ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் சீடராக அமைந்து தருமையாதீனத்தின் பெருமையைக் காசிவரை விளங்கச்செய்தது போல், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் தம்பிரானாக விளங்கிய காலை ஆதீனத்தின் பெருமையை நாடறியச் செய்தார்கள் எனச் சுட்டி வரவேற்புரை நிகழ்த்தினார்.

திரு. சுகந்தநாதம் பிள்ளை அவர்கள், ஜனாதிபதி. மேதகு. V. V. கிரி, நீதிபதி. கனம். திரு. எஸ். மகராஜன், புதுவை அமைச்சர், திரு. இராமசாமி மற்றும் பலரும் அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்திகளை வாசித்தார்.

விழாக்குழுவின் சார்பாக டாக்டர். திரு. சுவாமிநாதன் அவர்கள் வரவேற்பு வாழ்த்திதழ் ஒன்றை வாசித்து, வெள்ளி

வேலைப்பாடு அமைந்த சிவலிங்க வடிவத்தொடு வைத்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்திடம் அளித்தார். திரு. சி. மகாதேவன் அவர்கள் பாராட்டுக் குழுவின் சார்பில் சந்தனமாலை அணிவித்தார். கல்யாணசோழபுரம் அறத்துறைத் தலைவர். திரு. சிதம்பரம் பிள்ளை அவர்கள் விழாக்குழுவின் சார்பில் பொன்னாடை போர்த்தினார்.

அடுத்து அன்பனுதபுரம் வகையார் அறத்துறை நிறுவனத்தின் சார்பாகத் திரு. கணபதி சுப்பிரமணியம் அவர்கள் பாராட்டுப் பத்திரம் வாசித்தளிக்க, திரு. E. N. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் மலர்மாலை அணிவித்தார்.

பின்னர், ஏ. வி. சி. கலைக்கல்லூரி செயற்குழுவின் சார்பாகத் தலைவர். திரு. இராம்மோகன் சண்முகம் அவர்கள் வாழ்த்துப்பா வாசித்தளிக்க, செயலாளர். திரு. பாலசுப்பிரமணிய பிள்ளை மலர்மாலை அணிவித்தார். அடுத்து தருமபுரம் ஞானம்பிகை அரசினர் மகளிர் கலைக்கல்லூரி சார்பாகத் திருமதி. வசந்தகுமாரி அவர்கள் வாழ்த்துப்பாப் படித்தளிக்க, மாணவியர் தலைவி செல்வி. கேதாரம் மலர்மாலை அளித்தார். தொடர்ந்து மாயூரம் அரசினர் மகளிர் உயர்பள்ளி சார்பாக செல்வி. மைதிலி மலர்மாலை அளித்தார்.

அடுத்து, மாயூரம் கார்காத்தார் சங்கத்தின் சார்பில் திரு. டி. எஸ். தியாகராஜன் அவர்களும், கல்யாணசோழபுரம் அறத்துறை நிறுவனத்தின் சார்பாக திரு. ஸ்ரீனுவாசபிள்ளை அவர்களும் மாலை அணிவித்தனர். மாயூரம் தெய்வத்தமிழ் மன்றத்தின் சார்பாக திரு. ஆர். இராஜசேகரன் அவர்கள் பாராட்டிதழ் வாசித்தளிக்க, ரசிகமணி. திரு. ஏ. என். சுப்பிரமணிய ஐயர் அவர்கள் மலர்மாலை அணிவித்தார்.

அடுத்து, மாயூரம் நகர்மன்றத் தலைவர். திரு. அபுல்ஹசன் அவர்கள் மாலை அணிவித்துச் சிறப்பித்தார்.

பின்னர், கும்பகோணம், சிவநேசச் செல்வர்கள் சார்பாக திரு. ஆர். டி. அரசு அவர்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்திற்குப் பொன்னாடை போர்த்தி ஆசிபெற்றார்.

கும்பகோணம், வள்ளலார் மாணவர் இல்லத்தின் சார்பில் திரு. எஸ். கே. சொக்கலிங்கஞ் செட்டியார் அவர்கள் மாலை அணிவித்தார். அடுத்து, நெடுங்காடு வள்ளலார் மாணவர்

இல்லத்தின் சார்பில் திரு. இராமையா பிள்ளை வாழ்த்திதழ் வாசித்தளித்தார்.

அடுத்து திருவழுந்தூர் ஸ்ரீ மேதா தட்சிணாமூர்த்தி மகாபிஷேக அசோசியேஷன் சார்பில் திரு. இராமதாச அய்யர் அவர்கள் மாலை அணிவித்தார்.

மற்றும், மேனுங்குடி தருமபாகம் சார்பில் திரு. எம். பாலசந்திரன் அவர்களும், மாயூரம் சர்வோதய சங்கம் சார்பாக திரு. சாம்பசிவம் அவர்களும், மாயூரம் நகராட்சி உயர்பள்ளி சார்பில் திரு. சுந்தரேசம் பிள்ளை அவர்களும், கூறைநாடு நகராட்சி உயர்பள்ளி சார்பில் திரு. சேதுராமையர் அவர்களும், லால்குடி, அறநெறிக் கழகத்தின் சார்பில் திரு. G. V. இராஜேந்திரன் அவர்களும் மலர்மாலைகள் அணிவித்து மகிழ்ந்தனர்.

குத்தாலம் சிவநேசச் செல்வர்கள் சார்பில், திரு. இராஜகோபால வாண்டையார் அவர்கள் வாழ்த்துப்பா வாசித்தளித்தார். சித்தர்க்காடு வாரவழிபாட்டுக் கழகத்தின் சார்பில் திரு நடராசன் மலர்மாலை அணிவித்தார். மணக்குடி, திரு. முருகையா பிள்ளை அவர்கள் பாராட்டிதழ் படித்தளித்தார்.

பாராட்டிதழ்கள் வாசித்தளித்து மலர்மாலைகள் சூட்டி மகிழ்ந்தபின்னர் அன்பர்கள் பலர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் எழுந்தருளுகைக்கு நன்றிதெரிவிக்கும் வகையில் பாராட்டுப் பணிவுரைகள் வழங்கினர்.

அறப்பணிச்செல்வர்

டாக்டர். திரு. கே. அரங்கசாமி பிள்ளை அவர்கள், சிதம்பரம்.

மாயூரம் காவிரிக்கரையில், அம்மை மயிலாக இருந்து பூசித்த பெருமை உடையது. இங்கே மக்கள் நல்லறஞ்செய்து வாழ்கின்றனர். தருமை ஆதீனம் அருகிலிருப்பது மாயூரத்தின் பெருமைக்குச் சிறப்புத்தருவது. தருமையில் குடிகொண்டு அருள் வழங்கும் பதினெட்டுத் திருக்கரத்து கொற்றவையின் தண்ணருள் இம்மாயூரத்தில் வீசுகிறது. இந்நாள் மாயூரம் நகரத்தின் பொன்னுள். சிவனும் குருவும் ஒன்று என்பது நம் ஆன்றோர் கருத்து. இன்று மகாசந்நிதானத்தில் உலாவந்தது சிவபெருமானே உலாவந்ததாகக் கருதத்தக்கது. சாதி, மதம் கடந்து அனைவரும் ஒன்றுபட்டு, மாயூரம் நகரசபைத்தலைவராகிய ஒரு

முகமதியர் உள்பட ஒன்றுபட்டு வரவேற்பளிப்பது பெருமைக் குரியது. திருஞானசம்பந்தரை வரவேற்றபோது 'சென்ற காலத்தின் பழுதிலாத்திறனும், இனி எதிர்காலத்தின் சிறப்பும் இன்று யாம் எழுந்தருளப்பெற்ற பேறிதனல் எற்றைக்கும் திருவருளுடையோம்' என மக்கள் மகிழ்ந்ததுபோல ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்தில் எழுந்தருளப்பெற்றதால் நாமும் மகிழ்கிறோம்.

அவர்களை இன்று இங்கே வரவேற்றுக் கொலுவிருத்திய தால் அவர்களுக்குப் பெருமை ஒன்றும் இல்லை; அது நமக்கே பெருமை தரத்தக்கது. இக்குருவழிபாடு நமக்குத் திருவருட் பயனைத் தரவல்லது. குருவருளின்றித் திருவருள் கிட்டாது.

வாழ்க சடைமுடி! வாழ்க திருமுகமண்டலம்! வாழ்க திரு முறைப்பற்று! வாழ்க சமூகத்தொண்டு! வாழ்க அடியார்குழாம்!

திருக்குறள்வேள் திரு. ஜி. வரதராஜப்பிள்ளை அவர்கள்

இந்நாளில் மாயூரம் ஒரு புது எழுச்சி பெற்று விளங்கு கிறது. அரசியல் தலைவர்களுக்கு அளிக்கப்படுவதற்கு மேலாக இங்கே வரவேற்பளிக்கப்பட்டுள்ளது. ஞானசம்பந்தர், அப்பர் பெருமானர் பலதலங்களுக்கும் சென்று வழிபட்டதைக் கேட்டிருக் கிறோம். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்திடம் அத்திறத்தை நேரில் காண்கிறோம். இவர்கள் பெரியவர்கள், சிறியவர்கள், தாய்மார் கள் - குழந்தைகள் என்ற பேதமின்றி எல்லோரிடத்தும் ஒரு மித்துப் பழகியவர்கள். இவர்களுக்குத் தமிழ்நாட்டில் தெரியாத இடமோ, இவர்களை அறியாத மக்களோ இல்லை.

சைவ - சமயத்தின் சிறப்பு குருவையே தெய்வமாக மதிப்ப தாகும். குருமகாசந்நிதானத்திடம் சேவைசெய்ய வேண்டு மென்ற இச்சையும் - ஆற்றலும் உண்டு. நாம் அனைவரும் ஒத்துழைத்தால் சமயத்தில் புதிய புரட்சியைக் காண முடியும். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் பல்லாண்டு வாழ்க எனப்பிரார்த்திக் கிறேன்.

பாராட்டுக் குழுவின் சார்பாக

திரு. ஜி. இராமச்சந்திரம் பிள்ளை அவர்கள்

ஆயிரம் ஆனாலும், மாயூரம் ஆகாது என்ற பெருமை தருமை அருகில் இருப்பதால் வந்த சிறப்பேயாகும். தருமை வரலாற்றிலும், மாயூரம் வரலாற்றிலும் பொன்னெழுத்தில்

பொறிக்கவேண்டிய இத்திருநாளில், மாயூரம் மக்கள் தருமை யாதீனத்தின் அறப்பணிகளுக்கு ஆதரவாக இருக்கிறோம் என உறுதிகூறுகிறார்கள். இத்தொடர்பு நீடிக்க வேண்டுமென்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இவர்கட்கு முன்பிருந்த சந்நிதானத்தின் காலத்தில் ஆதீனத்தின் திருக்கோயிற் பணிகள் பெரும்பாலும் நடந்து முடிந்துவிட்டன. இவர்கள் சமுதாயப் பணிகளுக்கும், குறிப்பாக கல்வி நிலையங்கள், மருத்துவ மனைகள் முதலியவற்றிற்கும் உதவவேண்டும். மக்கள் வாழ்வு வளம்பெற திருமடங்கள் பலவழிகளில் உதவ முடியும்.

சென்னையில் இருந்து தொண்டாற்றிப் பெருமைபெற்ற இவர்கள் இப்பீடத்திற்குத் தகுதிமிகவுடையவர்கள். இவர்கள் ஆட்சியில் நாடும், பெரிதும் வாழும் என நம்பி, அவர்கள் தொண்டுகளுக்குப் பக்கபலமாக இருப்போம் என உறுதி கூறுகின்றேன்.

திரு ஔவை. து. நடராசன் அவர்கள் – சென்னை

" ஆயிரம் ஆனாலும் மாயூரம் ஆகாது என்பதற்கு ஒரு காரணம் சொன்னார்கள். எனக்கு ஒரு பொருள் தோன்றுகிறது. ஆயிரம் வரவேற்புகள் நிகழ்ந்தாலும் இம் மாயூர வரவேற்பிற்கு நிகராகாது என்பதே இப்பழமொழியின் பொருளாக இருக்க வேண்டுமென்பது, இவ்விழாவினைக் காண்கையில் உள்ளத்தில் தோன்றுகிறது " என்று கூறி, பொள்ளாச்சி, தொழிலதிபர் திரு. நா. மகாலிங்கம் அவர்கள் கொடுத்திருந்த செய்தியினைவாசித்தார்.

திரு. இராமதாச ஐயர் அவர்கள் – ஆநந்ததாண்டவபுரம்.

ராஜரிஷி என்ற வடசொல்லுக்குச் செல்வமும் – தவமும் உடையவர் என்பது பொருள். 'ராஜரிஷிகள் மூலமே தத்துவங்கள் விளங்கும்' என்பது கீதை வாசகம். செல்வமின்றி – தருமம் இயற்ற முடியாது. செல்வமும் – நடைமுறைப்படுத்தும் திறமும் இருந்தால்தான் அறம் நிகழும். இவை எல்லாம் நிகழத் தெய்வ பலமும் வேண்டும். கல்வி என்ற ஓடத்தால் ஆசை என்ற ஆற்றைத்தாண்டுவதே விழாவிற்குப் பெருமை. இத்தகு திறம் பெற்ற 26வது குருமகாசந்நிதானத்திடம் 25வது குருமகா சந்நிதானத்தின் திறத்தைக்காண்கின்றேன். இவர்கள் பணியில் தேவாரத்தின் எதிர்காலமும் – ஆஸ்தீகத்தின் எதிர்காலமும் சிறக்கும் என எதிர்பார்க்கிறேன்.

திரு. ஆர். டி. அரசு அவர்கள் – கும்பகோணம்.

குருமகாசந்நிதானத்தின் வருகையால் இளைஞர் சமுதாயத்தில் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. சில விதிமுறைகளை உடைத்தெறிந்து, இளைஞர் சமுதாயம் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகளில் பங்கேற்றால், இளைஞர்கள் ஆக்கபூர்வமான நற்பணிகளுக்கு இவர்கள் காட்டிய வழியில் இவர்கட்குப்பின் நிற்பார்கள் என்பது உறுதி.

அன்பர்களது பாராட்டுரைகளுக்குப் பின்னர் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்தில் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான அன்பர்களுக்கு அருளுரை வழங்கி ஆசீர்வதித்தார்கள். (ஸ்ரீலஸ்ரீ மகா மகாசந்நிதானத்தின் அருளுரை தனியே இவ்விதழில் இடம் பெற்றுள்ளது)

அருளுரைக்குப்பின் – மாயூரம் வழக்குரைஞர் திரு. குஞ்சிதபாதம் ஐயர் அவர்கள் நன்றி கூற வாழ்த்தொடு விழா நிகழ்ச்சிகள் யாவும் இரவு 12-10 மணியளவில் நிறைவெய்தியது.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

இன்று தாம்பரம் திருநெறி மன்றத்தின் சார்பில் அன்பர் ஐம்பதின்மர் வழிபாட்டிற்கு வந்திருந்தோம். ஸ்ரீ வைத்தியநாத சுவாமியையும், திரு. செல்வமுத்துக்குமார சுவாமியையும் மன நிறைவோடு வழிபட்டோம். அன்பர்களை மிகச் சிறந்த முறையில் வரவேற்றுச் சிறப்பாக ஆலய வழிபாட்டை ஆலய நிர்வாகத்தார் நடத்திக்கொடுத்தார்கள். ஆலயம் மிகத் தூய்மையாகவும், மனத்தில் தெய்வபக்தியை ஊட்டுகின்ற முறையிலும் அமைந்துள்ளது, ஆலயத்தைச் சிறப்பாக நிர்வகித்துவரும் தருமபுரம் சந்நிதானமும் மற்றைய பெரியோர்களும் பாராட்டுக்குரியவர்கள்.

எங்களுடைய பணிவான வணக்கங்களைச் சந்நிதானம் அவர்கட்கும் மற்றையோர்க்கும் அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம். வாழ்க செல்வமுத்துக்குமாரசுவாமியின் நாமங்கள். வாழ்க சைவம்.

(ஒ-ம்) வடிவேலாயுதனார் — (ஒ-ம்) V. N. இராஜரெத்தினம்,
தலைவர், தமிழ்ப்பேராசிரியர். — செயலாளர்.

சிதம்பரத்தில்

சிவநேசச்செல்வர்கள் குரு வழிபாடு

தருமையாதீனம் 26வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் 4—2—72 வெள்ளிக்கிழமையன்று தில்லை சிவகாமியம்மை திருக்கோயில் மகாகும்பாபிடேக யாகசாலை தரிசனத்திற்கு எழுந்தருளியபோது சிதம்பரம் சிவநேசச்செல்வர்கள் மாபெரும் வரவேற்பளித்துப் பாராட்டிக் குருவழிபாடு நிகழ்த்தி ஆசிபெற்றனர்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் காலை 9-30 மணி அளவில் கனகசபை நகரில் உள்ள ஆதீனக் கட்டளைமடத்திற்கு எழுந்தருளினர்கள். அங்கிருந்து, சைவ - சமய சந்தானசாரியர் நால்வருள் நாலாவது ஆசாரியராகியவரும், தில்லை மூவாயிர வர்களாகிய தீட்சதர் மரபினரும், பதினன்கு சாத்திரங்களில் எட்டுச் சாத்திர நூல்களை அருளிச் செய்தவருமாகிய கொற்றவன் குடி உமாபதி சிவாச்சாரியார் திருக்கோயிலுக்குச் சென்று அபிடேக ஆராதனைகள் நிகழ்த்தி வழிபாடு செய்தார்கள். உமாபதிசிவத்திற்கு மகரகண்டிகை சார்த்தி, ஆதீன வெளியீடாக அச்சிடப்பெற்ற உமாபதிசிவத்தின் எட்டுநூல்கள் அடங்கிய 'சித்தாந்த அட்டகம்' என்ற நூலை திருவடிகளில் வைத்து வணங்கி மகிழ்ந்தார்கள். உமாபதிசிவம் திருக்கோயிலைப் பராமரித்துவரும் விருத்தாசலம் குமாரதேவர் திருமடத்தின் மேலாளர் மகாசந்நிதானத்தை வரவேற்றுப் பொன்னுடை போர்த்து வரவேற்ருர்கள்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டுத் தில்லை நடராசப்பெருமான் திருக்கோயிலுக்கு எழுந்தருளி, ஸ்ரீ நடராசப்பெருமான் ஸ்ரீ சிவகாமியம்மை, மற்றும் இறையவர் திருமேனிகட்கும், சந்திரமௌளீசுவரருக்கும், ரத்தினசபாபதிக்கும் விசேட அபிடேக - அலங்கார - ஆராதனைகள் நிகழ்த்துவித்து வழிபாடாற்றினர்கள். தில்லை மூவாயிரவர்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தைப் பூரணகும்ப மரியாதைகளுடன் வரவேற்று சிறப்பாக வழிபாடு செய்வித்தார்கள். பேரம்பலத்தில் பொது தீக்ஷிதர்கள் வரவேற்புரை ஒன்று வாசித்தளித்து பொன்னுடை போர்த்து மாலை அணிவித்துச் சிறப்பித்தார்கள். பின்னர் பேரம்பலத்தில் தில்லை பொது தீட்சதர்கள் இருநூறுபேர்களுக்கும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் வஸ்திரங்கள் வழங்கியருளி ஸ்ரீ சிவகாமியம்மை திருக்கோயில் திருப்பணிகளையும் பார்வையிட்டுக் கட்டளை மடத்திற்கு எழுந்தருளினர்கள்.

மாலை 4 மணி அளவில் மீண்டும் புறப்பட்டு சந்தானுச்சாரியருள் மூன்ருமவராகிய மறைஞானசம்பந்தர் திருக்கோயில் கொண்டுள்ள திருக்களாஞ்சேரியிலுள்ள சிங்காரத் தோப்பிற்குச் சென்று ஆசாரியமூர்த்திகளுக்கு அலங்காரம் செய்வித்து வழிபாடு நிகழ்த்திஞர்கள், அடுத்து, அங்குள்ள பழைய சிவத்தளியில் எழுந்தருளியிருக்கும் பிரமபுரீசுவரரை வழிபட்டார்கள். அடுத்து தில்லையின் வடஎல்லையில் கோயில்கொண்டு அருள் வழங்கும் தில்லை ஸ்ரீ காளியம்மன் திருக்கோயில் சென்று வழிபாடு நிகழ்த்திக் கட்டளை மடத்திற்கு எழுந்தருளிஞர்கள்.

மாலை 6 மணி அளவில் சிவநேசச்செல்வர்கள் மகாசந்நிதானத்தை வெள்ளி நாற்காலிப் பல்லக்கில் அடியார் புடைசூழ தில்லைப் பெருங்கோயிலுக்கு எழுந்தருளச்செய்தார்கள். தில்லை நகரத்தில் தெருவெல்லாம் வரவேற்பு வளைவுகளும் வண்ணத் தோரணங்களும் அமைந்து அழகு தந்தன. மக்கள் இல்லங்கள் தோறும் விளக்கேற்றி வைத்துக் கோலமிட்டு, பூரண கும்ப மரியாதைகள் செய்தனர். வழிநெடுக ஆயிரக்கணக்கான அன்பர்கள் வணங்கி விபூதி பெற்றனர். கீழை வீதி வழியாக ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் எழுந்தருளி சந்நிதியில் பல்லக்கிலிருந்து இறங்கி நடைபாவாடை விரிப்பின் (வழி) திருக்கோயிலுக்குச் சென்றடைந்து, வரவேற்பிற்கென அமைக்கப்பெற்றிருந்த அலங்கார குருவழிபாட்டுப்பந்தலில் எழுந்தருளிஞர்கள். விழாக் குழுவின் சார்பில் சிதம்பரம் அறப்பணிச்செல்வர். திரு. கே. அரங்கசாமி பிள்ளை அவர்கள் மகாசந்நிதானத்தை வரவேற்று, பாராட்டுக்கவிமலர் ஒன்றைப் படித்தளித்துப் பொன்னுடை போர்த்தி ஆசிபெற்ருர்கள். திரு. க. வெள்ளைவாரணனர் அவர்களும் மகாவித்துவான். திரு. ச தண்டபாணி தேசிகர் அவர்களும் மாயூரம் டாக்டர், திரு. M. சாமிநாதன் அவர்களும் சுவர்ணவெங்கடேச தீக்ஷதர் அவர்களும் பரிபூரணமடைந்த ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் வழிவந்த மகாசந்நிதானத்தின் பத்தியையும் செயல்திறத்தையும் தமிழாற்றலையும் சமய ஈடுபாட்டையும் போற்றி உரையாற்றினர். சென்னை வித்துவான். திரு ப. வடிவேல் பிள்ளை அவர்கள் வரவேற்புக் கவிமலர் படித்தளித்தார். சென்னை டாக்டர். திரு M. நடராசன் அவர்களும், காட்டுமன்னர்குடி நாட்டுச்சின்னப்பண்ணை திரு. M. இராமலிங்கம் பிள்ளை திருமகனர் திரு. R. ரத்தினம் அவர்களும், அண்ணமலைப் பல்கலைக் கழகம் புலவர், திரு. G. சோமசுந்தரம் பிள்ளை அவர்களும், பொன்னுடைகள் போர்த்தி வணங்கி மகிழ்ந்தனர். சிதம்பரம் தேவார பாடசாலை அதிபர் சிவ இராமலிங்க முதலியார் அவர்களும். ஆறுமுக

நாவலர் உயர்பள்ளியின் சார்பில் தாளாளர் அவர்களும் வரவேற்புரை வாசித்தளித்தார்கள். பல்வேறு நிறுவனங்கள், அன்பர்கள் சார்பில் மலர் மாலைகள் அணிவிக்கப்பெற்றன. தில்லைப் பொது தீட்சதர்களின் செயலாளர் அவர்கள் விழாத் தலைமை ஏற்று உரை நிகழ்த்தினர்.

விழா நிறைவில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான சிவநேசச் செல்வர்களுக்கு அறவுரை பகர்ந்து, அருளாசி வழங்கினர்கள்.

நன்றியுரையோடு குருவழிபாடு நிறைவுற்றது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் ஸ்ரீசிவகாமியம்மை திருப்பணிச்செலவுகளுக்காகத் திருப்பணி கமிட்டித்தலைவர், திரு. பொன்னம்பலம் பிள்ளை அவர்களிடம் ரூ. 5001—00 வழங்கியருளினர்கள்.

குருவழிபாட்டிற்குப் பின்னர், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் யாகசாலை வழிபாட்டிற்கு எழுந்தருளி வழிபாடு நிகழ்த்தினர்கள். தீட்சதர்கள் யாகசாலை வழிபாடு நிகழ்த்துவித்து பொன்னுடை போர்த்து மாலை அணிவித்துச் சிறப்பித்தனர்; வழிபாட்டிற்குப் பின்னர் மகாசந்நிதானம் தருமைக்கு எழுந்தருளினர்கள்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithiyanathaswami Devasthanam, Vaithiswarankoil.

இன்று சென்னைத் தியாகராயநகர்த் தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தின் புலவர் வகுப்புப் பழைய மாணவர் கழகத்தினரேம், ஸ்ரீலஸ்ரீ ஷண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களைத் தரிசித்து ஆசி பெறுதற் பொருட்டுத் தருமபுரம் செல்லும் வழியில், வேளூர்ப் பெருமானைத் தரிசித்து மகிழும் பேறு பெற்றேம், கட்டளை விசாரணைத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், அனைவருக்கும் தாயினும் சாலப் பரிந்து மிகவும் நல்ல முறையில் ஆலய தரிசனம் செய்வித்துத் தண்ணளிகள் புரிந்ததுடன் அன்பர்கள் அனைவருக்கும் சிற்றுண்டிகளும் அளித்து மிகவும் உபசரித்தார்கள். ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களின் திருவருள், இங்ஙனமெல்லாம் எங்களை ஆட்கொண்ட கருணைத் திறனை நினைந்து, நாங்களெல்லாம் எல்லையில்லாத மகிழ்வும் விம்மிதமும் அடைந்தோம். நன்றி. வணக்கம்.

புலவர் மாணவ கழக உறுப்பினர்கள் சார்பில்,

5—12—71. (ஒ-ம்.) ந. ரா. முருகவேள்,

செய்திகள்

ஆதீனத் திருக்கோயில்களில் பாவை மாநாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில்களில் பாவை மாநாடு ஆண்டுதோறும் நிகழ்வதுபோல இவ்வாண்டும் சிறப்பாக நடைபெற்றது.

வேளூரில் :

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் 6-1-72 வியாழக்கிழமை மாலை 6 மணி அளவில் பாவை மாநாடு தொடங்கி நடைபெற்றது. சென்னை, கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்களும், திருமதி. ப. நீலா அவர்களும் கலந்துகொண்டு முறையே திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர்.

திருப்பனந்தாளில் :

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி திருக்கோயிலில் பாவை மாநாடு 6—1—72 வியாழக்கிழமையன்று மாலை 6 மணியளவில் சிறப்பாக நடைபெற்றது. மாநாட்டில், சென்னை. சித்தாந்தப்புலவர்மணி, திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ. எம்.ஓ, எல். அவர்களும், வித்துவான். வி. சா. குருசாமி தேசிகர் அவர்களும் கலந்துகொண்டு முறையே, பாவையும் கோவையும், திருப்பள்ளியெழுச்சி, என்ற தலைப்புக்களில் விரிவுரையாற்றினர்; அன்பர்கள் பாவைப் பாடல்களின் பயன் உணர்ந்தனர்.

திருபுவனத்தில் :

திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 3—1—71 திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு நிகழ்ந்த பாவை மாநாட்டில், திருவாரூர். திரு. மு. இரத்தினதேசிகர் அவர்களும், வித்துவான். திரு. வி. சா குருசாமிதேசிகர் அவர்களும் முறையே திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி என்ற தலைப்புக்களில் சொற்பெருக்காற்றி மக்களை மகிழ்வித்தனர்.

திருக்குவளையில் :

திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி திருக்கோயிலில் 9-1-72 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு நிகழ்ந்த பாவை மாநாட்டில் திருவதிகை, புலவர். திரு. ந. சண்முகசுந்தர தேசிகர் அவர்களும், திருவையாறு, தருமையாதீனப் புலவர், திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்களும் முறையே திருப்பள்ளி யெழுச்சி, பாவைப்பாடல்கள் என்ற தலைப்பில் விரிவுரையாற்றி பாவைப் பாடற் பயனை மக்கள் உளங்கொளச் செய்தனர்.

திருக்கடவூரில் :

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 12—1—72 புதன்கிழமை நிகழ்ந்த பாவை மாநாட்டில் மாலை 6 மணிக்குத் தருமையாதீனப்புலவர் திரு. சி. அருணைவடிவேல் முதலியார், செஞ்சொற்கொண்டல். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ. ஆகியோர் முறையே பாவைப் பாடல்கள், திருப்பள்ளி யெழுச்சி என்ற தலைப்புக்களில் விரிவுரையாற்றி மக்களை மகிழ்வித்தனர்.

சீகாழியில் :

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் பாவை மாநாடு 7, 8-1-72 ஆகிய இரண்டுநாட்களும் மாலை 6 மணிக்குச் சிறப்புற நடைபெற்றது. 7—1—72 வெள்ளிக்கிழமை தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர், நல்லறங்காவலர். திரு. எம். பக்தவத்சலம் பி. ஏ., பி. எல். அவர்கள் மாநாட்டைத் தொடங்கிவைத்தார்கள். சென்னை, ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி, மா. சே. சாரங்கபாணி முதலியார் எம். ஏ , பி. எல். அவர்கள் தலைமையில் சித்தாந்தப் புலவர்மணி திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ. எம். ஓ. எல். அவர்கள் பாவைப் பாடல்களுள் பக்திநெறி என்ற தலைப்பிலும், திருவாசகமணி திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி எல்., அவர்கள், திருமுறைகளும் திவ்வியபிரபந்தங்களும் என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர். சென்னை குமாரி, இரா. கௌரி. குமாரி. இரா. சம்யுக்தா குழுவினர் மாணிக்க வாசகர் வரலாற்றை இன்னிசைக் கதையாக நிகழ்த்தினர்.

8—1—72 சனிக்கிழமை மாலை 6 மணி அளவில் பாவைப் பாடல்களுள் விஞ்சி நிற்பது இலக்கிய நலமா ? பக்திக் கனிவா? என்ற தலைப்பில் பட்டிமண்டபம் நிகழ்ந்தது. பட்டிமண்டபத்

திற்குத் திருச்சி, திரு. இரா. இராதாகிருஷ்ணன் எம்.ஏ. அவர்கள் நடுவராக இருந்து தலைப்பை விளக்கி பட்டிமண்டபத்தின் நெறி முறைகளை விளக்கிப் பேசினர்கள்.

அடுத்து இலக்கியநலமே என்ற தலைப்பில், திரு. தி. வ. காந்திமதிநாதன் பி. ஏ. (ஆனர்ஸ்), திரு. அறிவொளி எம். ஏ., புலவர். இரா. செல்வக்கணபதி ஆகியோர் பங்குபற்றி வாதிட்டனர். பக்திக்கனிவே என்ற தலைப்பில் திரு. அ. கலியபெருமாள் எம். ஏ. திரு. ஆ. செகந்நாதன் எம். ஏ. திரு. அ. பாலகுருவாயன் எம். ஏ. ஆகியோர் வாதிட்டனர். தலைவர் முடிவுரையில் பாவைப் பாடல்களுள் விஞ்சி நிற்பது பக்திக்கனிவே என்பதற்குப் பல சான்று காட்டி நிறுவினர்கள். அன்பர்கள் பலர் பங்குபற்றி கேட்டு மகிழ்ந்தனர்.

திருவையாற்றில் :

திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 5—1—72 புதன்கிழமை நிகழ்ந்த பாவை மாநாட்டில் கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்களும், வித்துவான் திரு. கு சுந்தரமூர்த்தி பி. ஏ. அவர்களும் பங்குபற்றி முறையே, திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர். அன்பர்கள் பலர் கேட்டுமகிழ்ந்தனர்.

தருமையாதீனம் சென்னை, சமயப் பிரசார நிலையத்தில்

நவம்பர் மாத நிகழ்ச்சிகள்

நாயன்மார் குருபூசை :

நவம்பர் 2 ஆம் நாள், திருமூலநாயனர் குருபூஜையும், 3 ஆம் நாள் நின்றசீர் நெடுமாற நாயனர் குருபூஜையும், 4 ஆம் நாள் இடங்கழி நாயனர் குருபூஜையும், 9 ஆம் நாள் சத்தி நாயனர் குருபூஜையும், 21 ஆம் நாள் மூர்க்கநாயனர் குருபூஜையும், 22 ஆம் நாள் சிறப்புலி நாயனர் குருபூஜை விழாவும் சிறப்பாகப் பதிகப் பாராயணம், புராண விரிவுரைகளுடன் நிகழ்ந்தேறின. முதல் மூன்று விழாக்களில் வித்துவான். திரு. ப வடிவேல் பிள்ளை அவர்களும், இறுதி மூன்று விழாக்களில் வித்துவான். திருமதி. ச. மீனுட்சிசுந்தர சிவை அவர்களும் புராண விரிவுரை நிகழ்த்தினர். திரு. ஞானப்பிரகாசம் தேவார பாராயணம் நிகழ்த்தினர். தேவார வகுப்பு மாணவ—மாணவியரும், சைவ நல்லன்பர்களும் கலந்து மகிழ்ந்தனர்.

சோமவார வழிபாடு :

நவம்பர் 1, 8, 15, 22, 29 ஆகிய நாட்களில் சோமவார வழிபாடு மாலை 6 மணி அளவில் திருக்கயிலாய பதிகம், போற்றித் திருப்பதிகம் முதலியன ஓதி, தேவார வகுப்பு மாணவ-மாணவிகளால் பாராயணம் செய்யப்பெற்றுச் சிறப்பாக நிகழ்ந்தேறின.

வேளூர் கிருத்திகை பிரசாதம் வழங்கும்விழா :

நவம்பர் 5ஆம் நாள் இவ்விழா ராவ்சாகிப், திரு. சின்னசாமி ஐயர் அவர்கள் தலைமையில், திரு. சு. ஞானப்பிரகாசம், திரு. ந. இராமலிங்கம் இருவராலும் வேளூர்த் தேவாரம், திருப்புகழ் பாராயணம் நிகழ்த்தப்பெற்று அன்பர்களுக்குச் சந்தனக்குழம்பு விபூதி பிரசாதம் வழங்கப்பெற்றன.

திருக்கடவூர் கார்த்திகைச் சோமவார சங்காபிஷேக பிரசாதம் வழங்கும் விழா :

நவம்பர் 23 இல், திருக்கடவூரில் நிகழ்ந்த முதல் கார்த்திகை சோமவார சங்காபிடேகப் பிரசாதம் வழங்கும் விழா, சென்னை காவல்துறை உதவி ஆணையர் திரு. எஸ். பொன்னுசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருக்கோயில், ஆசிரியர், திரு. ந. ரா. முருகவேள் அவர்கள் சோமவாரச் சிறப்புப்பற்றி உரையாற்றினர். நவம்பர் 30 இல் இரண்டாவது சோமவாரப் பிரசாதம் வழங்கும் விழா திரு. ஆங்கிரச. வேங்கடேச சர்மா அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. விழாத் தொடக்கத்தில் அபிராமி அந்தாதி பாராயணம் நிகழ்த்தப்பெற்று பிரசாதம் வழங்கப்பட்டது. வித்துவான். தவத்திரு. இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்பும் நன்றியும் கூறினர்கள்.

ஸ்ரீ மெய்கண்டார் குருபூஜை விழா :

நவம்பர் 16ஆம் நாள் ஸ்ரீ மெய்கண்ட தேவ நாயனர் குரு பூஜை விழாவை ஒட்டி காலையில் சிறப்பு வழிபாடு நிகழ்ந்தேறியது. மாலை சென்னை உயர்நீதிமன்ற நடுவர், கனம். திரு. ஆர். சதாசிவம் அவர்கள் தலைமையில் மெய்கண்டார் வரலாற்றுச் சொற்பொழிவும், குமாரி சந்திரா குழுவினரால் 'மெய்கண்ட தேவர் சரித்திர' இன்னிசைக் கதையும் நடைபெற்றது. திரு தாமோதர முதலியார் அவர்கள் வரவேற்பும் நன்றியும் கூறினர்கள்.

மாதாந்திர வழிபாடு :

நவம்பர் 28ஆம் நாள் திருவொற்றியூர் திருக்கோயிலில் நிலையத்தின் மாதாந்திர வழிபாடு நடைபெற்றது. ஸ்ரீ ஆதி புரீசுவரர், ஸ்ரீ வடிவுடையம்மை மூர்த்தங்களுக்கு விசேட - அபிடேக - அலங்கார - அர்ச்சனைகள் நிகழ்த்தப்பெற்றன.

அன்பர்கள் பலரும் கலந்து வழிபடுவதற்கு வசதியாக நிலைய அன்பர். திரு. சந்திரசேகர முதலியார் அவர்கள் சென்னையி லிருந்து பேருந்து வண்டி ஒன்று ஏற்பாடு செய்திருந்தார்கள். வழிபாட்டிற்குப் பின்னர், திரு. கீ. இராமலிங்கனார் எம். ஏ., அவர்கள் தலைமையில் நிகழ்ந்த சமயச் சொற்பொழிவு நிகழ்ச்சி யில், திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல். அவர்கள் தலச்சிறப்புப் பற்றி உரையாற்றினர். புலவர் திரு. கே. ஆறுமுகம் நன்றி கூறினர். அறுபதுக்கும் மேற்பட்ட நிலைய அன்பர்களும் பொதுமக்களும் திரளாகக் கலந்துகொண்டு வழிபாடாற்றினர்.

டிசம்பர் மாத நிகழ்ச்சிகள் :

திருக்கார்த்திகை தீப வழிபாடு :-

டிசம்பர் முதல் நாள் இவ்விழா தமிழரசு பத்திரிகை உதவி ஆசிரியர் திரு. பி. சி. லிங்கம் அவர்கள் தலைமையில் நடை பெற்றது. நிலையம் எங்கும் அகல் விளக்குகள் ஏற்றித் தீப வழிபாடு நிகழ்த்தப்பெற்றது, அண்ணாமலைத் தீபத்தின் வர லாற்றைத் தலைவர் அவர்கள் விரிவாக எடுத்துரைக்க, அன்பர் களுக்குப் பிரசாதம் வழங்கப்பெற்று விழா நிறைவெய்தியது.

வேளூர் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா :-

டிசம்பர் 2ஆம் நாள் இவ்விழா, மயிலை, கபாலீச்சுவரர் திருக் கோயில் அறங்காவலர் திரு. செல்வ நடராச முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்று அன்பர்களுக்குச் சந்தனக்குழம்பு, விபூதி பிரசாதம் வழங்கப்பெற்றன. திரு. ஞானப்பிரகாசம், வித்துவான். திரு. நா. இராமலிங்கம் இருவரும் வேளூர்த் தேவாரம், திருப்புகழ், நாமாவளிப்பாராயணம் நிகழ்த்தினர்.

திருக்கடவூர் கார்த்திகைச் சோமவார சங்காபிஷேகப் பிரசாதம் வழங்கு விழா :-

டிசம்பர் 7ஆம் நாள் மூன்றுவது சோமவாரப் பிரசாதம் வழங் கும் விழா, நிலைய அன்பர். திரு. ஆர். சிவஞானம் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. டிசம்பர் 14ஆம் நாள் நான்காவது சோமவாரப் பிரசாதம் வழங்கு விழா, திரு. கீ. இராமலிங்கனார் எம். ஏ., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல். அவர்கள்

(தொடர்ச்சி அட்டை 3 ஆம் பக்கம் பார்க்க)

எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

திரு. K. முத்துஜோதிடர்

(விரோதிகிருது௵ மாசிமீ 1௳ முதல் 30௳ முடிய)

(13—2—72 முதல் 13—3—72 முடிய)

விரோதிகிருது௵ தைமீ 29௳ சனிக்கிழமை கிருஷ்ண பக்ஷம் திரியோதசியும் உத்திராடம் 3ம் பாதமும் அன்று உதயாதி 59 நாழிகை 35 விஞடிகையும் கூடிய சுபவேளையில் உதயகால மகர லக்னத்தில் ஸ்ரீ லோகரக்ஷகரான சூரிய பகவான் மகரராசியிலிருந்து கும்பராசிக்கு மாசிமாத பிரவேச மாக மாதபிரவேசம் செய்கிருர். ஷ. பிரவேசகால பலன் தக்ஷிணபாரதத்துக்கும் காவேரி தீரத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தையும் தனதான்யவிருத்தி மூலமாய் இதுவரை கண்டிராதபடிக்கு மிகவும் மேலானஸ்தியையும் கொடுக்கும பூமிக்குள்ளோரும் தர்மிஷ்டர்களும் நிர்வாகிகளும் சாமான்ய மான நடுத்தர வகுப்பாரும் ஏழை மக்களும் பரமசந்தோஷத்தை அடைவார்கள். விலைவாசிகள் குறையும். அமைதி ஏற்படும். கும்பபிரவேச சமயமான மகரத்தில் ராகுவும் குரு சனி ஒருவருக் கொருவர் ஷஷ்டாஷ்டகத்திலும் சஞ்சரிப்பதால் விந்தியோத்ர தேசம் ஹிமாசலபரியந்தமும் அன்னியதேசங்களில் இந்தி யாவுக்கு வடக்கு கிழக்கே உள்ள தேசங்களிலும், பலவித உத்பாதங்களைத்தரும். பயமுண்டுபண்ணும், நாஸ்தீகமில்லாத தேசங்கள் மிகுந்த சுபிக்ஷகரமாய் இருக்கும் அந்தத் தேசங் களில் தெய்வசாந்தி நித்தியம் இருந்துகொண்டே இருக்கும், துஷ்ட நிக்ரகமும் சாதுஜனரக்ஷணமும் ஏற்படும். தர்மம் காப்பாற்றப்படும்.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி பூராவும் சுபபலனைத்தரும். வித்யாவிருத்தி யாகும் கீர்த்தி பத்திரம் தரும். சுபகாரியங்கள் மூலமாய்

அடிக்கடி சஞ்சாரமும், அதிகமாக செலவுகளும் ஏற்படும். தேவதாகுரு தரிசனம் கிடைக்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

விருஷபராசி மிசிரபலனைத்தரும். வரவு செலவு சமமாகும். பந்துமித்ராளுக்கு உபகாரம் செய்தலும், தேவாலய கைங்கரியங்களும், மேலோர் பெரியோர் தரிசனமும் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். செவ்வாய், புதன் சுபமாகும்.

3. மிதுனம் – மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

மிதுன ராசி பலன் சுபமாகும். அடிக்கடி சஞ்சல புத்தியைத்தரும். எந்தக்காரியமும் யோசனை இல்லாமல் நடக்க, பின்பு கவலைக்கிடமாகும். வித்யா விருத்தியாகும். நூதனத் தொழில் ஏற்படும். குடும்பம் ரக்ஷிக்கப்படும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

கடகராசி பலன், இடம் மாறும். மேல்பதவியைத் தரும். கீர்த்திபத்திரம் கொடுக்கும். மேலோர் பெரியோர் அன்பினுலும் தெய்வசக்தியாலும் சகலமும் சுலப சாத்தியமாகும். மத்தியகாலத்தில் கொஞ்சம் வைத்தியசெலவுகள் உண்டாகும். ஆனுலும் சுபமேயாகும். சனி, செவ்வாய் சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼.

சிம்மராசி. மிசிரபலனைத்தரும். உத்தியோகத்தில் ஜாஸ்தி பொறுப்பும், மேல்பதவியும் ஏற்படும், குடும்பம் விருத்தியாகும். தூரதேசத்திலிருந்து அழைப்புப் பத்திரம் வரும். தாய்தந்தையர்களுக்குள் கவலை கொடுக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½.

கன்னியாராசி பலன் பல அற்புதங்களைச் செய்துகாட்டும். ஜீவனத்தில் பல மாறுதல்களும் தரும், கிராம பூமிகள் ஏராளமான லாபத்தைத் தரும் புத்திராதிகளால் சுபமுண்டாகும்.

குடும்பம் ஓங்கும். சுபவிரயங்கள் அதிகமாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி பூராவும் பூர்ண சுபமாகும். நூதனமான தொழில் விருத்தியும், குடும்ப சுகமும், சுபசோபனாதிகளும், யஞ்ஞயாகாதிகள் மூலம் தெய்விகத் தன்மையும், உலக பிரசித்தியும், கீர்த்திபத்திரமும் தரும். தெய்வ பலம் முன்னின்று காக்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி மிசிரபலன் தரும், குடும்பத்தொல்லைகளால் அதிக விரயம் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். நூதனமாக தொழில் ஆரம்பித்தலும், பலபேருடைய உதவியும், உலக பிரசித்தியும் உண்டுபண்ணும், தெய்வபலம் முன்னின்று காக்கும். செவ்வாய் புதன் சுபமாகும்

9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் ¼.

தனுர்ராசி பலன் மிசிரமாகும். வரவு செலவு சமமாகும். க்ஷேத்திராடனங்கள் ஏற்படும். சுபசோபனாதிகள் மூலம் விசேஷ செலவினங்கள் ஏற்படும். மனம் சந்தோஷமடையும். குடும்பம் ஓங்கும், புத்திராதிகளாலும் மித்திரர்களாலும் விசேஷமாக உபகாரம் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும் வியாழன், வெள்ளி சுபமாகும்

10. மகரம்– உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½

மகரராசிபலனும் மிசிரமாகும். அதிக உழைப்பும், அடிக்கடி சஞ்சாரமும், பந்துமித்ராளின் சேர்க்கையும் தரும். வம்சம் விருத்தியாகும். உத்தியோகத்தில் மேல்பதவிக்கான சூசனங்கள் ஏற்படும். நஷ்டமான பொருள் தானே வந்துசேரும். சனி, ஞாயிறு சுபமாகும்.

11. கும்பம் – அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி ¾,

கும்பராசி விசேஷ சௌக்யத்தைத் தரும். குடும்பம் மேலோங்கும். எதிர்பாராதவிதமாக அநேக நன்மைகள் தானாக

வந்துசேரும் தெய்வசக்தியால் மனம் சாந்தி அடையும். கலிதோஷம் குறையும். சதா தெய்வ சிந்தனையாகவே இருக்கும். சத்ருக்கள் சரண் அடைவார்கள். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபத்தையே தரும். தன தான்ய விருத்திகள் ஏற்படும். ஸ்தாவர ஜெங்கமங்கள் புதிதாக வந்து சேரும். அடிக்கடி பிரயாணங்கள் இருந்து கொண்டு இருக்கும் கிரஹ சுகம் ஓங்கும். நண்பர்களால் பலவிதமான நன்மைகள் ஏற்படும் கீர்த்தி உண்டாகும். புதன், வியாழன் சுபமாகும்

குறிப்பு :- காஷ்மீரம், காம்போஜம், பௌத்தம் நீசம் இந்த தேசங்களும் பிறநாடுகளில் வடக்கு கிழக்கு தேசங்களும் தொல்லைகளை அனுபவிக்கக் கூடுமாதலால் சகல தேசங்களிலும் நாஸ்தீகம் மறைந்தால் ஜயம் உண்டாகும்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Panchanatheeswaraswamy Temple, Tiruvaiyaru.

As usual this historic temple is one of the Divine acquisition of Dharmapuram Adhinam. It is maintained in its Customary way so neatly and efficiently that it is found to instill faith and Divine fervour in all those who visit it. I am glad that I had the blessings of Sri Ayyarappaswamy.

(Sd.) Ramaprasad Rao
Justice
Tamil Nadu High Court.

18—1—72.